# திருக்குறள் பாதையில்

# எம்.ஜி.ஆர்







# திருக்குறள் பாதையில்
# எம்.ஜி.ஆர்

ஆசிரியர்
**ஜெ. பாலன்**

முதற்பதிப்பு : மார்ச் 1984

உரிமை : ஆசிரியருக்கே

விலை : ரூ. 4-00

நெய்தல் வெளியீடு
30, வி. சி. நாயக்கன் 3-வது தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை—5.

# என்னுரை

இந்நூல் எனது நான்காவது படைப்பு. இப்படி சில புத்தகங்கள் எழுதும் ஆற்றலும், திறமையும் எனக்கு உண்டா? என்ற எண்ணத்தை முறியடித்து இத்தனையும் எழுதியுள்ளேன்.

முதன் முதலாக "சங்கறுக்கும் எங்கள் குலம்" என்ற நூலை எழுத நினைத்த போது, என்னையுமறியாத ஒரு பயம் எனக்குள்ளே இருந்தது. நண்பர்கள் சிலரின் உதவியுடன் அதனை எழுதி வெளியிட்டேன்.

அச்சம் என்பது மனிதனுக்கு தொடர்ந்து இருக்கக் கூடாது. அதுவே அவனுக்கு தீராத நோய். அண்மையில் கூட நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திரா அம்மையார் அவர்களை நீங்கள் எப்படி வாழ நினைக்கிறீர்கள்? என்று பத்திரிக்கை நிருபர்கள் கேட்டதற்கு உடனே, அவர்கள் "நான் யாரையும் கண்டோ, எதையும் பார்த்தோ பயமின்றி வாழ நினைக்கின்றேன்" என்று தெளிவாகக் கூறுகிறார்கள். இந்த 20-ஆம் நூற்றாண்டில் ஒரு நாட்டின் பிரதமர் பயமின்றி, அச்சமின்றி வாழ வேண்டும் என்று சொல்கிறார் என்றால், அது ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

இரண்டாவதாக "மராட்டிய மாநில மீனவர்களும் அரசு நன்மையும்" என்ற நூலை மீன்துறை துணைப் பதிவாளர் அவர்கள் உதவியோடு எழுதி வெளியிட்டேன். மூன்றாவதாக "நீரிலாடும் மனிதர்கள்" என்ற நூலை எழுதி வெளியிட்டேன். முதல் மூன்று நூல்களை எழுதும் போது இருந்த பயம் என்னை விட்டு அறவே நீங்கி போய் விட்டது. "துணிவே துணை" என்ற நிலைக்கு என்னை நான் தயார் செய்துக்கொண்டேன்.

நான்காவதாகத்தான், "திருக்குறள் பாதையில் எம் ஜி ஆர்" எனும் இந்நூலை, எழுதி வெளியிடுகிறேன். முதல் மூன்று நூல்களை விட இந்நூல் முற்றிலும் மாறுபட்டது. எனினும் ஆங்காங்கே இன உணர்வை சற்று இழையோட விட்டிருக்கிறேன்.

நான் பல நண்பர்களுடன் பழகி உள்ளேன். அவர்களில் நல்லவர்கள், வல்லவர்கள், அறிவாளிகளும் உண்டு. 'உயிர் காப்பான்' தோழன் என்பதைப் போல், நான் அனைவருக்கும் என்னால் இயன்ற அளவு உதவியை செய்து வருகிறேன்.

பல நூல்களைப் படிக்கும் போது நான் பிரமித்தே போகிறேன். ஆதிகால மனிதர்கள் பல அற்புதங்களை செய்துள்ளதை படிக்கும் போது வியப்பே மேலிடுகிறது. கம்பனும், வள்ளுவனும் எந்தக் கல்லூரியில் படித்தார்கள் அவர்கள் சாதனையை விட நாம் என்ன செய்து விட முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன். முடிவில் எதிலும் நம்பிக்கை வைத்தால் வெற்றியடையலாம் என்பதை உணர்ந்து கொள்கிறேன்.

மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. நமது இந்திய நாடு, முன்பு சிற்றரசுகள் நிறைந்த நாடாக இருந்ததால், ஆட்சி செய்தவர்கள் வெறும் கோயில் குளங்களை மட்டுமே உருவாக்கினார்கள். அதனால் நவீன முறை தொழிற்சாலைகள் உருவாக வில்லை. எனவேதான் இந்தியா மற்ற நாடுகளுடன் நவீன முறைகளில் முன்னேற முடியவில்லை. உலகம் இன்று வேகமாக முன்னேறத் துடிக்கிறது.

மக்களிடம் பொதுவாக ஒற்றுமை உணர்வு வளர வேண்டும். குறிப்பாக மீனவர்களுக்கு அது மிகவும் அவசியம். ஆனால் அவர்களிடம் ஒற்றுமையே இருக்காது என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். ஏனெனில்

மீனுக்கு உணவு மீன்தான். மீன் தன் இனத்தையே இரையாக்கிக் கொண்டு அந்த மீன்களைப் பிடித்து வாழும் மீனவ மக்களுக்கும் அதே குணம்தான் இருக்கும் என்பார்கள். மீனவர்களிடையே ஒற்றுமையை வலி யுறுத்தி, நான் புத்தகங்களில் எழுதியும், கூட்டங்களில் பேசியும் வருகிறேன்.

என்னுடன் கூடிப் பழகிய நண்பர்களுக்கு நான் கடுகளவு கூட தொல்லையோ, துன்பமோ கொடுப்ப தில்லை, எவரையும் எதிர்பார்த்தும் வாழவில்லை. எனது சுய திறமையில் தன்னம்பிக்கையில் வாழ்ந்தேன். வாழ்ந்தும் வருகிறேன். ஆனால் என் நண்பர்கள் சிலர் அவர்களால் வாழ்ந்தேன். வாழ்ந்து வருகிறேன் என்று நினைக்கிறார்கள். வாழைக்கு கீழ் கன்று வாழும் போது கல்லுக்குள் தேரை வாழும் போது, ஆறறிவு படைத்த தனி மனிதன் வாழ முடியாதா என்ன? நட்பு என்பதை உயிரினும் மேலாக மதிப்பவன் நான். நண்பர்கள் என்னைப் பற்றி தவறாக நினைக்கும் போது நான் அதைப் பற்றி கவலைப் படுவதேயில்லை. எனது தந்தை திரு. ஜெயராம் செட்டியார் பல முறை என்னிடம் சொல்வதுண்டு. உன்னை முதலில் நீ சீர் செய்துக் கொள். பிறகு மற்றவர்களைப் பார். எந்த ஒரு குறை யானாலும் திருத்திக் கொண்டு வாழ் என்று அதையே பின்பற்றி வாழ்ந்து வருகிறேன்.

எனது நண்பர்கள் பலருக்கு வாழும் வழியை காட்டி யுள்ளேன். உதவிகள் பல செய்துள்ளேன். ஆனால் அதுவே எனக்கு பகையாக முடிந்துள்ளது. யாரையும் கடுமையான வார்த்தைகளால் பேசியதில்லை. என்னை தாக்கிப் பேசுபவர்களை தாங்கி பழகியவன் நான். அறி யாமல் பலர் பேசுவதை நான் பொருட்படுத்துவதில்லை. "உடுக்கை இழந்தவன் கைபோல்—ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு—" என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப, நட்பை பெரிதும் மதித்து வாழ்ந்து வருகிறேன்.

"சிறு துரும்பும் பல் குத்த உதவும்" எனும் பழமொழிக் கேற்ப, ஒரு தனி மனிதனை உதாசீனப் படுத்தியோ தரக் குறைவாகவோ பேசக் கூடாது. பேரறிஞர் அண்ணாவை கூட, முன்பு எதிர்கட்சிக்காரர்கள் தேவடியாள் பிள்ளை என்று எழுதி வந்தார்கள். அதை கண்ட அண்ணா "அதன் அருகில் ஒரு விளக்கை வையுங்கள், மற்றவர்களும் படிக்கட்டும் என்றார். பின் எழுதியவர்களுக்கே அவமானமாக, போய் விட்டது. குறை சொல்ல நினைத்தால் யார் மீதும் எப்படியேனும் சொல்லலாம். நாட்டுக்கு விடுதலைபெற்றுத்தர பாடுபட்ட காந்தியைக் கூட சுயநலவாதி என்று எழுதி வந்தார்கள்.

மற்றவன் முன்னேறி விட்டானே நாம் முன்னேற வில்லையே என்று பொறாமை படக்கூடாது, முயற்சித்து முன்னேற வேண்டும். முன்னேறியவனைப் பார்த்து முன்னேற வழி காண வேண்டும். மனிதன் முயற்சித்தால் நடக்காதது ஒன்றுமில்லை. நமது தலைவர் எம் ஜி ஆர் அவர்கள் பாடியதைப் போல், சிந்தித்து முன்னேற வேண்டும். நமது முதல்வர் நிலையாக இருக்கிறார். காரணம் தன்னம்பிக்கை திறமை. ஒவ்வொரு தனி மனிதனும் முதலில் தன்னை சரி செய்துக் கொள்ள வேண்டும்.

இந்நூலில், தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களைப் பற்றியும், அவரது ஆட்சியின் சாதனைகளைப் பற்றியும் எழுதியுள்ளேன். இந்த புத்தகத்தை எழுதுவதற்கு பெரிதும் உதவியாக இருந்த நண்பர் த. இராமசாமிக்கும், திருமதி. ஜீ. சம்போஷினி; திருமதி சி. பரிமளா, ஆகியோருக்கும், திருவாளர்கள் தே. தமிழ்ச்செல்வன், லோ. இராஜேந்திரன், பி. குமார், பி. கடல்மணி ஆகியோர்களுக்கும், அணிந்துரை வழங்கிய திரு. டாக்டர் கு. மோகனராசு அவர்களுக்கும், த. இராமசாமிக்கும், இந்நூலை சீரியமுறையில் அச்சிட்டு தந்த ஸ்ரீ இராஜேஸ்வரி அச்சகத்தாருக்கும் எனது நெஞ்சு நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஜெ. பாலன்

# அணிந்துரை

டாக்டர் கு. மோகனராசு, B.Sc., M.A., Ph.D., D.Anth., D.Geog., D.H.Ed., Cert.-Skt., Cert.-Lx., Cert.-Ling.,

நூல்கள், வாழ்க்கையின் வழிகாட்டிகள்; வழுக்கும் நிலத்தில் ஊன்றுகோல்கள். அவை, மனித மனங்களைத் திறக்கும் திறவுகோல்கள்; தரமான துணைவர்கள்; நம்பிக்கை தரும் நல்லாசான்கள்.

—இவை நல்ல நூல்களுக்குரிய இலக்கணங்கள்.

இத்தகைய நல்ல நூல்களை உருவாக்கி மக்களினத்தை வாழ்விக்கும் நூலாசிரியர்களே உண்மையான தெய்வங்கள்.

அந்தப் பாதையில் கடந்த மூன்று ஆண்டுகளாக அடி வைத்து நடந்து வருபவரே பெருமதிப்பிற்குரிய திரு. பாலன் அவர்கள்.

ஃ ஃ ஃ

பிறந்தநாள் என்றால், ஆடம்பரங்கள் ஆரவாரங்கள் செய்து காசைக் கரியாக்கும் வீணர்கள் நிறைந்த இந்தச் சமுதாயத்தில், பிறந்த நாள்தோறும் ஒரு நூல் எழுதி வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டுச் செயற்பட்டு வரும் திரு ஜெ. பாலன் அவர்கள், வரலாற்றில் நிலையான புகழ்பெறத் தம் எழுத்துப் பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

ஓரளவே கற்ற திரு. ஜெ. பாலன் அவர்கள், இவ்வாறு நூல் வெளியிடுவதன் மூலம் படித்துப் பல பட்டங்கள் பெற்ற பெரும்பேராசிரியர்கள் கூட செய்யாத—செய்யத் துணியாத அரிய—பெரிய செயலைச் செய்த சாதனை வீரர் ஆகின்றார்.

இவருடைய இந்தச் செயல், பல பெரும் பேராசிரியர்களுக்குங்கூட ஓர் அரிய/ பெரிய பாடம்; படிப்பினை.

ஃ ஃ ஃ

திருக்குறள், ஈடு இணையற்ற உலகப் பொது நூல், இந்நூலை தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, அண்ணல் காந்தியடிகள் முதலிய பெரியவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் இந்நூலும் ஒன்று.

இந்நூல் சிறிய நூல்; ஆனால், வரலாற்றுக் கை விளக்காக அமைவது.

நூலாசிரியரோடு தொடர்புடைய பல செய்திகள் இதில் இடம்பெற்றுள்ளன.

'பொன்மனச் செம்மல்' அவர்கள் எவ்வாறு வள்ளுவமாகவே திகழ்கின்றார் என்பது மிகத் தெளிவாக இச்சிறிய நூலில் விளக்கப் பட்டுள்ளது.

இந்நூலின் பின்னிணைப்பாக உள்ள 'சிறிது நேரச் சிந்தனைகள்' என்னும் பகுதி அறிஞர்களையும் சிந்திக்க வைக்கும் பல அரிய/பெரிய உண்மைகளை உள்ளடக்கி இருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

இந்நூலை வெளியிட்ட பெருந்தகையாளர் ஜெ. பாலன் அவர்கள் நூறாண்டுகளுக்கும் மேல் வாழ்ந்து, எண்ணற்ற நூல்களை வெளியிட்டு, வரலாற்றில் அழியா இடம்பெறுவார் என்பது உறுதி.

கு. மோகனராசு

# அணிந்துரை

**த. இராமசாமி**
11, ஆவூர் முத்தையாமேஸ்திரி தெரு,
புதுவண்ணை, சென்னை-81.

**பொ**ன்மனம் படைத்த ஆசிரியர் ஜெ. பாலன் அவர்களின் திருக்குறள் பாதையில் எம். ஜி. ஆர் என்ற இந்நூலைப் படித்தேன். புத்தகத்தின் தலைப்பே மிகவும் அற்புதமாக இருந்தது. ஏழை எளியவர்களின், வாழ்க்கை தரத்தில் பின்தங்கியவர்களின் இன்னல்களை நீக்கி வாழ வழிவகுத்து தருவதில் டாக்டர் எம். ஜி. ஆர் இன்று மற்றவர்களை விட முன்னணியில் இருக்கிறார் என்றால், ஆசிரியர் கூறுவதைப் போல் அவர் திருக்குறள் பாதையில் வெற்றி நடை போடுவதால்தான். அத்தகைய பாதையில் செல்லும் தலைவரை பின்பற்றி செல்லும் இந்நூலாசிரியர் ஜெ. பாலன் அவர்களும், எளியோர்களை அரவணைத்து செல்வதில் தலைவர் வழியை அடி மாறாமல் பின்பற்றுபவர்.

இந்நூல் அவர் புகழ் கிரீடத்தில் பதிக்கப்பட்ட வைரக்கல், இதன் மூலம் அவரது பரந்த உள்ளத்தையும், பலருக்கு உதவ வேண்டுமென்ற உயர்ந்த உள்ளத்தையும், கருணை நெஞ்சத்தையும், அன்பு உள்ளத்தையுமே காணமுடிகிறது. அன்பால் அரவணைப்பதில் தாய்க்கு சமமானவர். அவரின் அன்புப் பிடியில் பலமுறை சிக்கித் தவித்தவன் நான்.

இந்த உயர்ந்த உள்ளம் கொண்ட இவர் தனது தலைவரைப் போலவே பல்வேறு புகழும் பெற்று, பார் போற்றும் வண்ணம் வாழ்வாங்கு வாழ பிரார்த்திக்கிறேன்.

அன்பன்,
த. இராசாமி.

# இயக்கத்தின் தோற்றம்

"எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அரிது

என்பது போல் யார் எந்த காரியம் செய்தால் அது நடக்கும் என அறிந்து அந்த காரியத்தைச் செய்ய முற்பட வேண்டும்.

அந்த அடிப்படையில் இந்த மாபெரும் இயக்கத்தை துவக்கி புரட்சித் தலைவர் வெற்றிப் பெற்றார் என்றால் அது சாதனை, வெற்றி அல்ல. தீயில் பூத்த மலர் போல் இந்த இயக்கம் தொடர்ந்து வளர்ந்தது.

புரட்சித் தலைவரிடம் நல்ல கொள்கைகள் பல இருந்தது. அவைகளை எடுத்து சொன்ன பாங்கு சினிமாத் துறை. அதனால் படிக்காத மக்கள் புரிந்துக் கொள்ளும் வாய்ப்பு சுலபமாக அமைந்தது. அதனால் அவர் தொடங்கிய இயக்கம் வென்றது மட்டும் அல்ல. இது நாள் வரை உலகத்தில் யாரும் அடையாத வெற்றியையும் பெற முடிந்தது. அதனால்தான் அவர் தொட்டது துலங்கும், பட்டது விளங்கும் என்றார்கள்.

மற்றவர்கள் யார் சொன்னாலும் எடுபடுமா? கறை படியாத சுத்தமான கரத்துக்குச் சொந்தக்காரர் சொன் னார். நான் மக்கள் வரி பணத்தை ஊதாரித் தனமாக செலவு செய்ய மாட்டேன், என்றார். மக்கள் அதனை ஏற்றார்கள், கேட்டார்கள். உலகத்தில் பல்வேறு இயக்கங்கள் தோன்றியது. ஒரு நடிகர் தன்னந்தனியாக ஒரு இயக்கத்தை தோற்றுவித்து அது நான்கு ஆண்டு களில் ஆட்சியை பிடித்தது என்றால் இவர் செய்த இந்த சாதனை வேறு யாருமே செய்ய வில்லை. இது புரட்சி இல்லையா?

இவர் தன்னிந்தனியாக நடத்தினார் தர்ம யுத்தம். இந்த போரில் தர்மரையும் மிஞ்சும் வகையில் பொறுமை யுடன் இருந்தார். சூதாட்டத்தில் தர்மன், நாடு நகரத்தை வைத்து ஆடி, தோற்றும், தன் மனைவியை வைத்து சூதாடியும், அவையில் திரெளபதியை துரியோதணன் தரக்குறைவாகபேச துட்சாதணன் துயில் உரிய, இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாண்டவர்கள் பலமிருந்தும், வலிமையிருந்தும், வீரமிருந்தும், ஊமையாக இருந் தார்கள். என்ன காரணம்? கட்டுப்பாடு. தர்மரின் வேண்டுகோள்.

அது போல்தான் புரட்சித் தலைவரின் தொண்டர்கள் வெட்டுப்பட்டார்கள். அவர்கள் பட்ட அடி உதைகளுக்கு அளவே இல்லை. உயிர் இழந்தார்கள். பெண்கள் தாலி பறிக்கப்பட்டது. பெண்கள் கற்பழிக்கப் பட்டார்கள். மாணவர்களுக்கு சிறைவாசம். மாணவர்கள் இரத்தம் சிந்தினார்கள். கண்போனது, கால் போனது, சொத்து உடைமைகள் பறிக்கப் பட்டது. நல்ல அரசு துறை வேலைகளை சிலர் இழந்தார்கள். சிலர் அலுவலங்களின் பதவி உயர்வுகள் பாதிக்கப் பட்டது. அரசு அதிகாரிகளை வேலை மாற்றம் செய்தார்கள். இது போன்ற எண்ணற்றத் தொல்லைகள் கொடுத்தது, அன்றைய ஆளும் வர்க்கம்.

இதையெல்லாம் எதிர்த்து தகர்த்துதான் இந்த இயக்கத்தை வளர்க்க பொருப்பும், பழியையும் ஏற்றுக் கொண்டார் புரட்சித் தலைவர். ஒரு கட்சி ஆரம்பிப்பது அவ்வளவு எளிதுஅல்ல. தன்னந் தனிமையாக இருந்து இந்த தர்மப் போரில் வெற்றிப் பெற்றார், புரட்சித் தலைவர்.

பாரதப் போரில் தர்மன் வெற்றிப் பெற்றார் என் றால், அவருக்கு துணையாக இருந்தது கண்ணன் அதேப் போன்றுதான் அண்ணாவீன் கொள்கை, திட்டம், அவர் திறமை, அவர் பேச்சுக்கள், அவர் எழுத்துக்கள்

ஆகியவைகள் கண்ணனைப் போல் உதவி செய்து இந்த தர்மயுத்தம் வெற்றி பெற மிகவும் துணையாக இருந்தது.

இந்த இயக்கத்திற்கு கொடி ஏற்படுத்த சில நாட்கள் ஆனது. இருந்தும் மக்கள் தனக்கு பிடித்த கொடியையும் சின்னத்தையும் வைத்துக் கொண்டார்கள். மதுரையில், அழகிரி பாலன், சங்கரபாண்டியன் என்ற இரண்டு சிங்கங்கள் மருது பாண்டியர் போல் இணைந்து செயல் பட்டு ஆரம்ப காலத்தில் மதுரையில் தாமாகவே கொடி யேற்றினார்கள். அது போன்று பல மாவட்டங்களில் அவரவர் விருப்பப்படி கொடிகளை ஏற்றினார்கள்.

கொடியின் அமைப்பை பலர் பல முயற்சி செய்து உருவாக்கினார்கள். பெரிய் தகுதி உடையவர்கள் எனக் கருதும் தலைவர்கள், புரட்சி தலைவரிடம் சேர பயந்த காலம். தொண்டர்கள் இலட்சக்கணக்கானவர்கள் சத்தியா ஸ்டுடியோவில் காலை முதல் மாலை வரை காத்துக் கிடப்பார்கள். உடன் அனகாபுத்தூர் இராமலிங்கம், முசிறிபுத்தன், இருந்தார்கள். முனு ஆதியும் உடன் இருந்தார். இன்னும் பலர் புரட்சிப் பெரியோர்கள் உடன் இருந்தார்கள். திரு. கெ. ஏ. கிருஷ்ணசாமி தென்னகம் பத்திரிகையில் புரட்சித் தலைவரை ஆதரித்து எழுதி வந்தார். இந்த நிலையில் தான் அண்ணாவின் உருவம் பதித்த கொடியை உருவாக்கி மக்களுக்கு அறிமுகம் செய்தார் புரட்சித் தலைவர். அதற்கு பேராதரவு கிடைத்தது. மக்கள் ஆரம்பத்தில் இந்த கொடியை தயாரிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும் என்றார்கள். உலகத்தில் எந்த, நாட்டிலும் இப்படி ஒரு கொடி கிடையாது, எனவே இது புரட்சிக் கொடி என்றால் மிகப் பொருத்தமே.

# பண்பின் சிகரம்

'தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதிலால்
தோன்றலின் தோன்றாமை நன்று'. என்ற குறளுக்கு ஏற்ப தலைவருக்கு நடிக்கமட்டும் தானா தெரியும் அரசியலும் தெரியும், பொருளாதாரம் தெரியும் இலக்கியங்கள் இதிகாசங்களைப் படித்தார். தத்துவம் தெரியும். வீரம் உண்டு. திறமை உண்டு, நாணயம் உண்டு. நம்பிக்கை உண்டு. சீர்திருத்தம் தேவை என்றார். மூட நம்பிக்கையை அகற்ற முயன்றார். அன்பை நாட்டு மக்களிடத்தில் வெளிக் காட்டினார். இப்படி எல்லா திறமையும் கொண்ட அடக்கமான தலைவரைப் பற்றி நாட்டு மக்களுக்கு தெரியாது. தி. மு. க. வை விட்டு வெளியே வந்தார். மக்கள் அவரை புரிந்து கொண்டார்கள்.

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்போம் என்றார்கள். ஆனால் அப்படிச் சொன்ன இயக்கத்தையே காணோம். எத்தனைப் பேர் ஏளனமாக பேசினார்கள். நடிகன் நாடாளலாமா? என்றார்கள். ஒருமுறையல்ல மக்கள் இரண்டு முறை ஆள அனுமதித்தார்கள். இனியும் ஆதரிப்பார்கள். வாழ்க்கை தரத்தில் பின் தங்கியவர்கள் பாட்டாளிகள் உழைப்பாளிகள், இவர்கள் தான் இந்த இயக்கம் வளர உதவி செய்தார்கள்.

இந்த இயக்கம் தோன்றிய நேரத்தில் கூட்டங்களுக்கு நிதி தர மறுத்தார்கள். அது மட்டும் அல்ல. அடி ஆட்களை வைத்து அடித்தார்கள். அன்றைய ஆளுங் கட்சிக்கு பயந்தார்கள். வக்கற்றவர்கள் வக்கணை பேசினார்கள். தெம்பற்றவர்கள் எக்காளம் இட்டார்கள். இதற்கிடையில் தான் அ. இ. அ. தி. மு. க. வளர்ந்தது. பணக்காரர்கள், ஆட்களை விட்டு கூட்டம் நடக்காமல் தடுத்தார்கள். அடித்தார்கள். பண உதவி செய்யும் கடைக்காரர்களை அடித்து துன்புறுத்தினார்கள். அவர்கள் கடைகளைச் சேதப் படுத்தினார்கள். அவர்களால்

என்னென்ன கொடுமைகள் செய்ய முடியுமோ, அத்தனையும் செய்தார்கள்.

புரட்சித் தலைவரை அழித்து இந்த இயக்கம் வளராமல் தடுத்தார்கள். நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் என்றார்கள். ஈக்கள் என்றும், கொசுக்கள் என்றும், மூட்டைபூச்சிகள் என்றும் சொன்னார்கள். இதையும் மீறி தான் இந்த இயக்கம் வெற்றிக் கண்டது. உதாரணமாக சொன்னால் பாரதப் போர் துவங்கி விட்டது. அப்போது துரியோதனனும் தர்மரும் கண்ணனின் உதவியை நாடினார்கள். தலைப்பக்கம் வணங்காமுடி துரியோதனன் நின்றார். கால் பக்கம் தர்மர் நின்றார். கண்ணன் கண் விழித்து என்ன எனக் கேட்க தர்மர் தாங்கள் தலைமை தாங்கி போர் நடத்த வேண்டும் என்றார். சரி என்றார் கண்ணன். திரும்ப தலைப்பக்கம் துரியோதனன் நிற்கிறார். என்னவேண்டும் எனக் கேட்க எனக்கு குதிரைப்படை, யானைப் படை, மற்ற எல்லாக் கலைகளும் உள்ளது. தாங்கள் கொஞ்சம் படைபலம் உதவி செய்தால் நல்லது என்றார். கண்ணனும் சரி என்றார். ஆனால் இறுதியில் தர்மருக்கே கண்ணன் ஆதரவு கிடைத்தது. தர்மரின் பணிவு, அடக்கம் அந்த ஆதரவினை பெற்றுத் தந்தது. கண்ணனின் காலடியில் தர்மர் இருந்ததால், கண்விழித்த நேரத்தில் கண்ணனின் கண்களில் பட்டது தர்மரே. எனவே அவருக்கு ஆதரவு தந்து போரில் வெற்றியும் பெற்று அடக்கம் அமரருள் உய்க்கும் என்ற வள்ளுவரின் வாசகப்படி வென்றார். புரட்சித் தலைவரின் அடக்கம், அமைதி, பொறுமை அடக்கமான பண்பு அவரை உயர் நிலைக்கு கொண்டு வந்தது என்றால் மிகையாகாது.

# இயக்க தளபதிகள்

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்

இந்த இயக்கம் தோன்றும் போது பலத்த எதிர்ப்புகள் இருந்தது என்பது அனைவரும் அறிந்ததே! அந்த நேரத்தில் தி. மு. க வை விட்டு புரட்சித் தலைவரை நீக்கிய வுடன் அவருடன் லட்சம் பேர்கள் கட்சியில் சேர்ந்தார்கள் ஆதரவு தந்தார்கள். திரு முனுஆதி எம். எல். ஏ. திரு குழ. செல்லையா திரு ஜி. ஆர். எட்மண்ட், நகரசபைத் தலைவராக இருந்த திரு, மோகனரங்கம், திரு. அனகாப் புத்தூர் சி. இராமலிங்கம், இப்படி எண்ணற்றோர்கள், புரட்சித் தலைவர் படையில் சேர்ந்தார்கள். திரு எஸ். டி. சோமசுந்தரம், திரு கெ. ஏ. கிருஷ்ணசாமி, ஆகியோர்கள் இயக்கத்தின் தளபதியாக இருந்து செயல் பட்டார்கள். திரு. நாஞ்சில் மனோகரன், திரு ஆர். எம். வீரப்பன் திரு. பெ. சீனிவாசன், திரு துரைகோவிந்தராஜன், திரு மா. முத்துசாமி, போன்றவர்கள் பெரும் பங்கேற்று செயல் பட்டார்கள், என்பது மறுக்க முடியாதது ஒன்று.

ஆரம்பத்தில் கழகத் தலைவராக, திரு எம். சி. பாலன், பொதுச் செயலாளராக புரட்சித் தலைவர், துணைச் செய லாளராக திரு கி. மனோகரன், பொருளாளராக திரு எஸ். எம் துரைராஜ், கொள்கைபரப்பு செயலாளராக திரு எஸ். டி. சோமசுந்தரம், அமைப்புச் செயலாளராக திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, விவசாயப் பிரிவுச் செயலாளராக திரு முனுஆதி, தலைமை நிலையச் செயலாளராக திரு ஆர். எம். வீரப்பன், மாணவர் பிரிவு செயலாளராக திரு அழகு திருநாவுக்கரசு, மகளிர் பிரிவுச் செயலாளராக செல்வி பி. டி. சரஸ்வதி, நெசவாளர் பிரிவுச் செயலா ளராக திரு அனகாப்புத்தூர் ராமலிங்கம், வழக்கறிஞர் பிரிவுச் செயலாளராக திரு கற்பக விநாயகம், புரட்சித்

தலைவரின் சிறப்புப் பிரதிநிதியாக திரு ஜேப்பியார், போன்றோர்கள், கழகத்தில் ஆரம்ப காலத்தில் முக்கிய பங்கு வகித்து கட்சி பணியாற்றி வந்தார்கள்.

அனுபவம் இல்லாத நண்பர்களை வைத்துக் கொண்டு ஆட்சியை பிடிக்கும் அளவிற்கு கட்சியை வளர்க்க அவர்கள் பட்ட பாடு மிக அதிகம். அவர்கள் பட்ட கஷ்டங்களுக்கு அளவே இருக்காது. அவர்கள் பாடுபட்டு கழகத்தை வளர்த்தது கீர்த்தி முறையாகும் என்று சொல்லலாம்.

உதாரணமாக சொன்னால் ஒரு தலைமகன் வேட்டைக்கு போகிறான், எதிரில் வந்த யானை மீது அம்பு எய்கிறான், அம்புப் பட்ட யானை அலறி ஓடியது. வேடன் யானை எப்பக்கம் ஓடியது என தேடி வந்தான். அவன் முன் ஒரு அழகான ஆரணங்கு எதிர்படுகிறாள். அவள் நல்ல அழகி. பக்கத்தில் பளிங்கு போல் நீரோடை. கட்டழகன் மங்கையை பார்க்கிறான். மங்கை இவனை பார்க்கிறாள். இருவரும் கண்களால் பேசிக் கொள்கிறார்கள். அவளை மணந்து கொள்ளலாம் என இவன் நினைக்கிறான். திருமணம் என்றால் ஐயர் பார்த்து, நாள் நட்சத்திரம் பார்த்து தேதி குறித்து, கால நேரம் பார்க்கின்ற காலம் அது. இந்த நிலையில் மங்கை அருகில் தலைவன் சென்றான். வஞ்சியோ அஞ்சினாள். அஞ்சாதே அஞ்சுகமே என்றான் தலைவன். சற்று நேரத்தில் ஒரு பிளிறல் சத்தம் கேட்டது. என்ன என்று ஏந்திழையாள் கேட்டாள். என் வேல் வலி தாங்க முடியாமல் யானை பிளிருகிறது, என்றான் தலைவன். அப்படியா, யானை என்றால் எனக்கு பயம் என்றாள். அச்சமா? அச்சம் என்றாள் என் அருகில் வா என்றான். வந்தாள், அணைத்துக் கொண்டான். திருமணம் முடிந்தது. இப்படி தந்திரமாகவும், சாமர்த்தியமாகவும் புரட்சித் தலைவர் ஆட்சியை பிடித்ததாக கொள்ளலாம்.

திருவல்லிக்கேணியில் பந்தல்கார மாணிக்கம் என்பவர் இருந்தார். அவருடைய ஆதிக்கம் திருவல்லிக் கேணியில் கொடிகட்டி பறந்த காலம்.

'இடிபாரே இல்லா எமரா மன்னன்,
கெடுப்பாரே இல்லா கெடும்.'

என்பதைப் போல், தான் தோன்றித் தனமாக நடந்து விமான நிலையத்தில் திரு நாஞ்சில் மனோகரன் அவர்களை சட்டையைப் பிடித்து அடித்தார். எங்களுக்கு அப்போது கொதிப்புத்தான் வந்தது. நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் நடவடிக்கை எடுத்தார்கள். அவர் மன்னிப்பு கேட்டு திரும்பி வந்தார், அந்த பெரிய மனிதன். 89-ஆவது வட்டத்தில் டி. மணி என்பவர் வட்ட செயலாளராக இருந்தார். அவரை இவர் படுத்திய தொல்லைகள் ஏராளம். கழக கொடியை கம்பத்தில் ஏற்றிவிட்டுச் செல்லுவோம். திரும்பி வந்து பார்த்தால் கொடி கம்பமே இருக்காது. இப்படி பல தொல்லைகள் கொடுத்தார் மாணிக்கம் என்பவர். மணியை அடித்து சித்திரவதை செய்தார். மணிக்கு உறவினர்கள் இல்லாத காரணத்தால் ஊரை விட்டே சென்று விட்டார். கொஞ்சம் நாள் கழித்து ஊருக்கு வர முடிந்தது. இந்த வட்டத்தில் மணிக்கு பிறகு சங்கரன், ச. கணேசன், எஸ். நீலகண்டன், மனோகரன் போன்ற நபர்களை அமைப்பாளர்களாகப் போட வேண்டி இருந்தது. அத்தனைப் பேர்களுக்கும் இதே நிலை தான்.

| | | | |
|---|---|---|---|
| 81-வது | பழைய வட்டத்தில் | திரு | பெ. புகழேந்தியும் |
| 82-வது | ,, | ,, | நீலகண்டனனும் |
| 83-வது | ,, | ,, | ராதாகிருஷ்ணனும் (அடுத்து) துரைராஜீ, |
| 84-வது | ,, | ,, | கோவை கணேசனும் |
| 85-வது | ,, | ,, | வி. ராஜ்குமாரும் |

86-வது ,, ,, செந்தாமரையும்
கண்ணன், பொன்
வேதமுத்துவும்
87-வது ,, ,, டி.கே. இளங்கோவும்
88-வது ,, ,, எம் கே. குணப்
பாண்டியனும்
89-வது ,, ,, ச. கணேசனும்
90-வது ,, ,, தே. கோ. கண்ணனும்

அமைப்பாளர்களாக இருந்து இந்த இயக்கத்திற்கு பெரும் பங்கு ஆற்றினார்கள். பல தொல்லைகளுக்கு ஆட்பட்டார்கள். எத்தனை மிரட்டல்கள், இவை களையும் பொருட்படுத்தாமல் திருவல்லிக்கேணியில் பாடுபட்டு கட்சியை வளர்த்தார்கள். 90-வது வட்டத்தில் சாம்பமூர்த்தி, ஆர். ராமமூர்த்தி, பி. எஸ். இராசு, ஜலேந்திரன், பெருமாள், சண்முகம், முனுசாமி, மு. கிருஷ்ணன், மதி, கனகம்மாள், ராஜம்மாள் வள்ளி யம்மாள் போன்றவர்கள் மிக தீவிரமாக செயல்பட் டார்கள், என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. கைமாறு எதிர்பார்க்காமல் உழைத்தார்கள் என்பது பெருமைக்குரியது. ஏன் இந்த 90-வது வட்டத்தை சொல்லுகிறேன் என்றால் இங்கு சண்டை இல்லாத நாளே இல்லை எனலாம். அந்த அளவுக்கு தொல்லைக் கொடுக்கக் கூடிய வட்டம். இந்த வட்டத்தில் தான் மிக கொடுமையான சண்டைகள் நடந்தது.

இராவணனை எதிர்த்து ராமன் சண்டைக்குப் போனபோது, அணில் பாலம் கட்ட ஆற்றில் விழுந்து தன் உடலில் ஒட்டி உள்ள மணலை கடலில் கொட்டிய தாக படித்துள்ளோம். அது போல் இந்த வட்டத் தோழர்கள் இந்த இயக்க வளர்ச்சிக்கு பாடு பட்டார்கள் என்பதை சொல்லாமல் இருக்க முடியாது.

# தொண்டனின் எழுச்சி குரல்

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்படும்—குறள்**

இந்த இயக்கம் தோன்றும்போது பல்வேறுபட்ட மக்கள், தலைவர்கள், பல கட்சியை சேர்ந்தவர்கள், பல்வேறு இனத்தவர்கள் இந்த இயக்கத்தை ஆதரித்தார்கள். ஆனால் கட்சியை நடத்த முடியாதபடி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அவைகளை செய்ய விடாமல் அன்றைய ஆளும் கட்சியினர் தடையாக இருந்தார்கள்.

இந்த நாட்டை ஆளவேண்டும், என்பதால் எம். ஜி. ஆர். அவர்கள் இந்த இயக்கத்தை நமக்கு எதிரே ஆரம்பித்தார் என்று அன்று ஆளும் கட்சிக்காரர்கள் செய்த கொடுமை கொஞ்சமல்ல. ஈடு இணை இல்லாமல் அல்லல்பட்டு தொல்லைகள் அனுபவித்து இறந்தவர்கள் பலர், கண் இழந்தோர், கால் கைகளை இழந்தோர் பலர். படிப்பை இழந்தோர், வேலை இழந்தோர், உற்றார் உறவினர்களை இழந்தோர், இது போன்ற பல தொல்லைகளை அனுபவித்த போதிலும் இந்த இயக்கம் நன்றாகவே வளர்ந்தது.

'தீயில் பூத்த மலர் போல்' வளர்ந்த இயக்கம். எத்தனை தலைவர்கள் இந்த இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள். இருந்தும் ஆளும் கட்சியினர், அதிகார பலம் பணப் பலம், அடி ஆட்கள் பலம் இவை அத்தனையும் சேர்ந்து எதிர்த்தது.

துரியோதணன் 18 அக்ரோணி சேனைகள், குரு பெரியோர்கள், மற்ற நாட்டு சிற்றரசர்கள், துரோணர், கர்ணன், அஸ்வமத்தர்' 99 தம்பிமார்கள், துரோணாச்சாரி, பல்வேறு அரசியல் பக்தர்கள், எல்லாம் சேர்ந்து

பாண்டவர்களை எதிர்த்ததைப் போல் எதிர்த்தார்கள். வெற்றி பாண்டவர்களுக்கு என்றாலும், பட்ட தொல்லைகளுக்கு அளவு உண்டா?

ஆளும் கட்சிக்காரர்கள் பல தொல்லைகள் கொடுத்தார்கள். கொடுமையின் எல்லைக்கே சென்று விட்டனர். கதையில் படித்து இருக்கிறபடி தவறு செய்பவர்களை நரகத்தில் அடைப்பார்கள், கொதிக்கின்ற எண்ணெயில் போடுவார்கள். கழுமரம் ஏற வைப்பார்கள். தீயில் சுடுவார்கள், வாள்களால் கை, கால்களை அருப்பார்கள். இதுபோன்ற பல தொல்லைகள் கொடுப்பார்கள் என்று.

ஆனால் செய்யாத குற்றத்திற்கு பல வழக்குகளை சந்திக்க நேர்ந்தது. காவல் நிலையத்தில் பொய் வழக்குகள், ஆளுங்கட்சிகள் தூண்டுதலால், போடப்பட்டது. இதையும் தாங்கி இந்த இயக்கத்தை கழக தோழர்கள் வளர்த்தார்கள்.

முடிந்தவரை அனைவரும் வசதி உள்ளவர்கள் வசதி அற்றவர்கள், வாலிபர்கள், வயதான தாய்மார்கள், அனைவரும் இந்த இயக்கத்திற்கு உழைத்தார்கள். உதாரணமாக சொன்னால் சீதையை இராவணன் தூக்கி செல்லும்போது, தலைவர் கட்சி விட்டு நீக்கியது போல, வழியில் ஜடாயு பட்சி தனக்கு இராவணனை எதிர்க்க முடியாது என தெரிந்தும், எதிர்த்தது. பிறகு சிறகு வெட்டுப்பட்டு இறந்தது. இது போல இந்த இயக்கத்தில் எத்தனை இளைஞர்கள் ஈடுபட்டு போரிட்டு வெட்டுப்பட்டவர்கள், உண்டு.

துயரம் என்பது எல்லையற்றது. பொய் சொல்லாத அரிச்சந்திரனுக்கு விதி அவனை பிச்சைக்காரனாக்கி பிறகு சுடுகாடு காக்க வைத்து, மனைவியிடம் மிருகத்தனமாக நடந்து பிள்ளையை இழக்க, இது போன்ற சோக காட்சிகள் கூட கதையில் பார்த்தோம். ஆனால் வாழ்க்கையில் 20 ஆம் நூற்றாண்டில் புரட்சித் தலைவர்

தோற்று வித்த இயக்கத்தில் நடந்துள்ளது. உதாரண மாக பூலாவரி சுகுமாரன், உதயகுமார், இது போன்ற, இன்னும் பல உதாரணங்களைக் கூறமுடியும்.

இந்த இயக்கத்தில் ஏராளமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பாண்டவர்களுக்கு உள்ளதுபோல். ஆனால் ஆளும் கட்சியாளர்கள் செய்யும் கொடுமைகளை தாங்கிக் கொள்ள வேண்டும் என்பது தலைவரின் அன்பு வேண்டுகோள். தலைவரிடம் எல்லா வல்லமையும் உண்டு, பாண்டவர்களுக்கு உள்ளது போல். துரியோ தனன் அவையில் பாஞ்சாலியை அடித்து துயில் உரித்தது போன்ற கொடுமைகளை பாண்டவர்கள் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஏன்? தர்மரின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி, இதை எப்படி சகிக்க முடிந்தது. அதே நிலையில் தான் இந்த இயக்கத் தோழர்கள் பட்ட கொடுமைகளை யும் மான பங்கத்தையும் தாங்கிக் கொண்டார்கள்.

சிதம்பரம் பாலசுந்தரம் கல்லூரி மாணவன், கட்டிளங்காளை, படித்தவன், பலமுள்ளவன் வளமான குடும்பத்தில் பிறந்தவன். ராஜநடைக்கு சொந்தக்காரன், கர்ணனின் வள்ளல் தன்மை. அர்ச்சுனனின் வீரம், எழுத்தாற்றல், பேச்சாற்றல், இவைகளுக்கு சொந்தக் காரன். நிர்வாகத் திறமை உள்ள அன்பு முகம், மாணவர் மன்ற நிர்வாகி, எல்லாம் அம்சமும் அடங்கிய இயக்கக் குட்டி. எல்லாவித்தையும் கற்றவன்.

பாரதப்போரில் அபிமன்யு இருந்தால் அவனே போரை முடித்துவிடுவான் என அறிந்த கண்ணன், அவன் சுபத்திரை வயிற்றில் உள்ள போதே கதை சொன்னான். சுபத்திரை தூங்கி விட்டாள். ஆனால் அபிமன்யு, கதையை கேட்டுக் கொண்டு இருக்கிறான். சுபத்திரை தூங்கிக் கொண்டு இருக்கும் போது, குரல் மட்டும் கேட் கிறது. யார் குரல் என கண்ணன் பார்க்கிறான். பிறகு தெரிகிறது, கருவில் உள்ள அபிமன்யூ குரல் என்று. அந்த

நேரத்தில் தான் கண்ணன் கதையை இடையில் நிறுத்துகிறான். அதனால் சரகுடம் என்னும் வித்தையை அவன் கற்க தவறினான். அதன் விளைவு எல்லா சக்தியும் பெற்று இருந்தும் தந்திரத்தில் வெளிவர விபரம் தெரியாமல் மாண்டுவிடுகிறான். துரோணரால் அதேபோல் தான் சதிகாரர்கள் வாழும் நாட்டில், அபிமன்யூ போல ஏமாந்தவர் பாலசுந்தரம். கொஞ்சம் ஏமாளியாக இருந்ததால் அவனை வெட்டிக் கொன்றார்கள். இந்த இயக்கத்தின் வெற்றிக்கு காரணமே முயற்சிதான். ஆனால் நாடு அந்த நல்லவனை இழந்து விட்டது. அதனால் தான் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு பட்ட பாட்டை நினைத்தாலே மிக்க வேதனையாக இருக்கிறது.

இவ்வளவையும் தாங்கிக் கொண்டு 'புரட்சித் தலைவர்' எம். ஜி. ஆர் தன் முயற்சியால் வெற்றிக் கண்டார்.

# புரட்சித் தலைவரும் தொண்டனும்

'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்—அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.'

என்பதைப் போல் அனைத்து கழகத் தோழர்களும் தன் சொந்த செயல் என எண்ணி பாடுப் பட்டார்கள். தற்போது வெற்றிப் பெற்றார்கள்.

தொண்டர்களை அரவணைக்கும் பண்பில் உயர்ந்தவர் புரட்சித் தலைவர். வள்ளுவர் சொன்னது போல்'

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅயதெல்லாம் ஒருங்கு.—என்பது போல்

சோம்பல் இல்லாத தலைவர்கள் தன் முயற்சியில் எல்லா நலனும் பெறுவார்கள். திருமால் அவதாரம் எடுத்து நிலத்தை பறிக்க வந்தாலும் அவர் திறமையால், திறமையானவனாக மன்னன் இருந்தால் அதையும் இழக்காமல் பெற்று விடுகிறான் திறமை உள்ளவன். அது போன்று தான் எல்லா சக்தியும் பெற்று, நம் தலைவர் தமிழகத்தை திறமையோடு தன் வசப்படுத்தினார். தற்போது தமிழகத்தை ஆளுகின்றார். தொண்டர்களை உற்சாகப் படுத்தவும், அழைத்துப் பேசவும், உற்சாகம் காட்டவும், மிக திறமை மிக்கவர்.

சினிமா படம் எடுத்து அதில் நடித்த தலைவர் நல்ல கொள்கைகளை நாட்டுக்கு எடுத்து சொன்னார். வீர விளையாட்டுக்கு முதலிடம் கொடுத்து இளைஞர்களின் மனதில் இடம் பெற்றார். 'பெண்களை மதிப்பதில் மிக முக்கியத்துவம் கொடுத்த தலைவர் புரட்சித் தலைவர்.

கொடியை தொண்டன் எடுத்தாலே மிகத் தெம்பும் உணர்வும் வந்து விடுகிறது. மற்றவர் கொடியையோ,

தலைவரையோ, குறை சொன்னால் சாதாரணமான தொண்டனும தாங்கிக் கொள்ள முடியாது.

*1974*-இல் எச். வி. ஹண்டே தலைமையில் *90*-வது வட்ட மெரினாவில் கூட்டம். அப்போது நான் (ஜெ. பாலன்) திருவல்லிக்கேணி தொகுதி செயலாளர். கூட்டம் பேசவும், கொடி ஏற்றவும் எச். வி. ஹண்டே வருகிறார். வரும் முன்னால் பஸ் நிலையம் அருகில் கொடியேற்ற ஏற்பாடு செய்து இருந்தோம். அப்போது அந்த வட்டத்தில் தி. மு. க.வைச் சேர்ந்த கவுன்சிலர் எம். இராசு, வட்டச் செயலாளர் மறைந்த நடிகர் இராஜமாணிக்கம், மற்றும் 50 தி. மு. க. வினர்கள், இங்கு கொடி ஏற்றக் கூடாது என்றார்கள். அது சமயம், நான், டக்கர் மணி, கண்காட்சி பாணடியன், தே. கோ. கண்ணன், நமது இயக்க வட்ட செயலர் இராமமூர்த்தி ஆகியவர்களுடன் நாங்கள் எதிர்த்து நின்றோம். அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்ததால் எங்களை அடித்து விட்டார்கள். எனக்கு முட்டியில் அடி, மணிக்கு தலையில் அடி, பாண்டியனுக்கு மூக்கில் அடி. அன்று கூட்டம் நடைபெறாமல் தடுத்து விட்டார்கள், கொடியும் ஏற்ற முடியவில்லை. அது சமயம் 9 மணியளவில் டாக்டர் ஹண்டே வந்தார். எங்களை இராயப்பேட்டை மருத்துவ மணையில் சேர்த்து அவர் உடன் இருந்து சென்றார்.

பிறகு 2 நாளில் அந்த இடத்திலேயே அந்த கூட்டம் நடத்தினோம். அந்த நேரம் அந்த கூட்டம் நடத்தியது அன்றைய அ. தி. மு. க.வினருக்கு மிகக் கஷ்டம். இது போன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தில் மிக ஏராளமாக நடந்து பல பொருள்கள், உடைமைகள், உறுப்புகள், இழந்தோர்கள் அதிகம் மிக ஏராளமான தொல்லை அனுபவித்தார்கள் என்பது உலகறிந்த விஷயம்.

அரசியல் பொறாமையால் கருணாநிதி ஆட்கள் மூலம் சத்தியா ஸ்டுடியோவின் முன்னால் கஞ்சி ஊற்றினார். சத்தியா ஸ்டுடியோவில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவில்லை, என்பதை அரசியலாக்கினார், கருணாநிதி.

உடனே சென்னை மாவட்ட செயல் வீரர்கள், சென்னை ரிக்ஷாக்காரர்கள் பாரம் தூக்குவோர் மற்ற தொழிலாளர்களுக்கு உணவு இல்லை. ஆகவே கருணாநிதி வீட்டு முன்னால் வைத்து கஞ்சி ஊற்ற போகிறேன் என்று கஞ்சி எடுத்துக்கொண்டு போவோம். ஆனால் வழியில் மறித்து அன்றைய காவல் துறையினர் எங்களை கைது செய்தார்கள்.

நான், நிலவழகன், பாலகுமார், வின்சென்ட், மயிலை தமிழ்மணி, சதாநந்தம், ஆகியவர்கள் உட்பட 36 நபர்களை கைது செய்து 15 நாள் சிறையில் வைத்தார்கள். கருணாநிதி ஆட்சியில்.

இதே காரியத்தை செய்த கருணாநிதி கட்சி காரர்களுக்கு தண்டனை இல்லை. குற்றம் எனவும் சொல்லவில்லை. நாங்கள் செய்தது மட்டும் தான் குற்றம் என்றார்கள். இதையெல்லாம் தாங்கிக் கொண்டு எந்த விதமான கைமாறும் எதிர்பாராமல் கட்டுபாட்டுடன் அன்று கட்சி வேலை செய்த அதே தொண்டன், இன்றும் இருக்கிறான். 72, 73 இல் இருந்த அதே உள்ளம் தான் இன்றும் இருக்கிறது. 3—4—83 இல் நடந்த சைக்கிள் பேரணியிலும் 9—4—83 இல் நடந்த தொழிலாளர் பேரணியிலும். இதை கண் கூடாக காண முடிந்தது.

**''மாமியார் உடைத்தால் மண் பானை**
**மருமகள் உடைத்தால் பொன் பானை.''**

இது தான் கருணாநிதியின் குணம். பொறாமை குணம் படைத்தவர் நாட்டில் பலர் உண்டு. குந்தி தேவி ஆண் பிள்ளை பெற்றாள் என்பதால் பொறாமை தாங்காமல்

திருதராட்டிரன் மனைவி காந்தாரி, அம்மி குழவியை வயிற்றில் இடித்துக் கொண்டாளாம் இப்படிபட்ட குணம் உடையவர்கள் நாட்டில் பலர் உண்டு.

அப்பொழுது தி. மு. க. வினர் செய்த தொல்லை களையெல்லாம் தாங்கிக் கொண்டு தன் கட்சியின் வளர்ச்சியே நம் நோக்கம் என்பதை மனதில் கொண்டு லட்சக்கணக்கான தொண்டர்கள், பொது மக்கள், தாய்மார்கள். தொழிலாளர்கள், மாணவர்கள், அனை வரும் இந்த இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்து வருகிறார் கள். இலட்சக் கணக்கான தொண்டர்கள் பல போராட் டங்களில் சிறை சென்றார்கள். பெண்களும் சிறை சென்றார்கள். கட்சி வளர்ச்சியை லட்சியமாகக் கொண்டு செயல் பட்டார்கள், தொண்டர்கள். இவை களுக்கு எல்லாம் ஊக்கம் தந்தது கழகக் கொடி. வள்ளுவரின் கூற்றுப்படி தலைவரின் ஊக்கமே அனைத் திற்கும் காரணம்.

# இந்த இயக்கத்தின் பெண்களில் பங்கு

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

புரட்சித் தலைவர் ஆரம்பித்த இந்த புரட்சி இயக்கத்தில் பெண்களுக்கு பெரும் பங்கு உண்டு. ஆரம்ப காலம் முதல் புரட்சித் தலைவர் நடிகராக இருந்த காலத்தில் பெண்களுக்கென தனியான கருத்து சொல்லும் வகையில் படத்தில் பாத்திரம் அமைத்து நடித்தவர்.

அதனால் தமிழக பெண்கள் மிக உறுக்கமாக பாச மாக அன்பாக தலைவர் மீது அளவு கடந்த பிரியம் வைத்து இருந்ததால் தான் இந்த இயக்கம் தோன்றும் போது தமிழ் நாட்டுப் பெண்கள் தலைவருக்கு பக்கபல மாக இருந்தார்கள். இன்றும் இருந்து வருகிறார்கள்.

குறிப்பாக மீனவ பெண்கள், அரிஜன பெண்கள், குறவர்கள், குறிப்பாக வாழ்க்கை தரத்தில் பின் தங்கிய சமுதாயத்தில் உள்ள அந்தஸ்து இல்லாத அதாவது சாப்பாட்டுக்கு கூட கஷ்டப்பட்ட மக்கள் புரட்சி தலைவருக்கு துணை இருந்தார்கள், இருக்கிறார்கள். பெண்கள் தமிழ் நாட்டில் அரசியலில் ஈடுபடுவது மிக மிகக் குறைவு, இருந்தாலும் அதற்கென ஒரு அமைப்பு உருவாக்கி அதற்கென தலைமை பொருப்பு கொடுத்து மாவட்டம், பகுதி, வட்டம், ஒன்றியம் மன்றங்கள் இத்தனை அமைப்புகளுக்கும் தலைவர், செயலாளர் அமைத்து செயல்பட வைத்தது அ. இ. அண்ணா தி.மு.க. தான்.

அது மட்டும் அல்ல. தலைவர் காலத்தில் பெண்களுக்கு தனி இடம். மொத்த இடத்தில் 25 சதம் இட ஒதுக்கீடு, அரசு பதவிகளில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சட்ட மன்றம் நகராட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், போன்ற பதவிகளிலும் வாரியத் தலைவர் பதவியிலும் பெண்களுக்கு உரிமை கொடுக்கப் பட்டுள்ளது. இன்று புரட்சித் தலைவரின் ஊர்வலம், கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் பெண்கள் தான் அதிகம் இருப்பார்கள்.

மண்டோதரி, ஜான்சிராணி, அல்லிராணி, நளாயினி, கண்ணகி, மாதவி, அவ்வையார், போன்றவர்கள் இருந்தார்கள், என்று வரலாறு மூலம் பார்க்கின்றோம். எவ்வளவு புகழ்பட வாழ்ந்தார்கள் என்று சரித்திரம் சொல்லுகிறது.

அரிச்சந்திரன், சந்திரமதி என்பவர்கள் சரித்திர புகழ் பெற்று வாழ்ந்ததாக சரித்திரம் சொல்லுகிறது. அவர்களை கடவுள் சோதித்ததாகவும், அதனால் சோதிக்கப் பட்டு மிக துன்பத்திற்கு ஆளானதாகவும் வரலாறு சொல்கிறது. பதிபக்தி என்று சொல்வது, பெண்கள் நடத்தைக் காரணமாக அமைந்தார்கள் என்பதற்கு பழைய கதைகள் சான்று.

எந்த விதமான இக்கட்டு வருவதாக இருந்தாலும் அரிச்சந்திரன் பொய் சொல்ல மாட்டேன் என்று உறுதியாக இருந்தான். அதனால் அவனை சோதனை செய்ய கடவுள் அவருக்கு மிகுந்த தொல்லைகள் கொடுத்ததாக புராணம் சொல்லுகிறது.

கற்புடையவள் என்பதற்கு பல சான்றுகள் சொல்லப் படுகிறது. சந்திரமதியின் கணவன் அரிசந்திரன் வறுமையால் ஒரு சுடுகாட்டுக்கு காவல் இருந்தார். சந்திரமதியின் மகன் லோகிதாசன் பாம்பு கடித்து சாகிறான். அந்த

நேரத்தில் பணம் இல்லாத சந்திரமதி தன் மகனை சுடுகாட்டுக்கு எடுத்து செல்கிறாள். மகனை எரிக்க சுடுகாட்டுக்கு பணம் தரவேண்டும் என்கிறான். அந்த சமயம் அவளிடம் பணம் இல்லை. தான் ஒரு அனாதை என்கிறாள். யார் கண்ணுக்கும் தெரியாத இருந்த தாலி சந்திரமதி கழுத்தில் இருந்தது. அது அரிசந்திரனுக்கு தெரிகிறது. அந்த நேரம் பார்த்து பணம் கொடு என அரிசந்திரன் கேட்க சந்திரமதி என்னிடம் பணம் அல்லை, என சொல்ல உடனே அரிசந்திரன் உன்கழுத்தில் உள்ள தாலியை விற்று கொடு என கேட்க, அந்த நேரத்தில் சந்திரமதி தன் கணவனுக்கு மட்டும் தான் இந்த தாலி தெரியும், வேறு நபருக்கு தெரியாது. என் தாலி இவருக்கு எப்படி தெரியும். அப்படியானால் இவர் என் கனவனாக தான் இருக்க வேண்டும், என அவள் நினைக்க, பிறகு இருவரும் பெயர் என்ன என்று விபரங்கள் பேசப்படுகிறது.

அந்த கதையில் கூட தான் அணிந்த தாலி மற்றவர் களுக்கு தெரிய கூடாது, என்பது, தான் கற்புடைய வளாக இருந்ததால், அந்த தாலி கணவனுக்கு மட்டும் தெரியும், என்ற நம்பிக்கை வைத்து கதை எழுதினார்கள். பழைய கதை உண்மையா பொய்யா என்பது வேறு.

அதே போன்று தான் புரட்சித் தலைவர் ஆரம்பித்த கழகத்தில் தமிழ்நாட்டு பெண்கள் மிக புனிதமாக இருக்க, மிகவும் தேவையான இயக்கமானதால் தலைவர் மீது அளவு கடந்த பாசம் பக்தியால் அவருக்கு இழைக்கப் பட்டது கொடுமை என்று கருதி, இந்த கஷ்டத்தை தீர்போம் என இந்த இயக்கத்தை நிபந்தனை இன்றி ஆதரித்தார்கள். கற்புக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் பெண்கள்.

குறிப்பாக பெண்கள் ஒரு இயக்கத்தில் சேருவது என்றால் பெரும் எதிர்ப்பு வீட்டில் இருக்கும். ஆனால் படிக்காத பெண்கள் கட்டுப் பாட்டை மீறி இந்த

இயக்கத்தில் பெரும் பங்கு வகித்தார்கள். குறிப்பாக மீனவப்பெண்கள் இந்த இயக்கத்தில் பெரும் பங்கு வகித்தார்கள் என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

கட்சியில் சேர்ந்தால் மட்டும் போதுமா. கட்சிக்கு நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். கட்சி வளர்ச்சிக்கு மிக்க உதவியாக இருந்தார்கள்.

ஆகவேதான் பெண்கள் நம் இயக்கத் தலைவரை ஒரு தெய்வ பிறவியாகத்தான் கருதினார்கள். மிக உயர்நத இடத்தில் வைத்து நம் புரட்சித் தலைவரை மதித்தார்கள். மதிக்கிறார்கள். தன் பிள்ளையாக, தந்தையாக எந்த குணத்திலும் மிக உயர்வாக எண்ணும் மக்கள் தமிழக மக்கள் தெய்வமகாகவே எண்ணி மதிக்கிறார்கள்.

புரட்சிதலைவர் வாழ்வாங்கு வாழ்வதால்தான். அவர் தெய்வத்தின் நிலை போல வைத்து மதிக்கப் படுகிறார்கள்.

# வெற்றித் திருமகன்

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.**

ஒரு காரியத்தைக் செய்யமுயலும் போது சிந்தித்து காரியத்தில் ஈடுபடவேண்டும். ஒரு காரியத்தில் ஈடுபட்டு செய்ய ஆரம்பித்தபிறகு எண்ணுவது படுமுட்டாள்தனம். என்பதைப்போல் பல்வேறு அரிய கருத்துகளை மிக தெளிவாக சொன்ன வள்ளுவர் நம் புரட்சித்தலைவருக்காகவே இந்த குறளை எழுதினார் என நான் கருதுகிறேன்.

பல்வேறு திட்டங்கள் தீட்டுவதிலும் அதை செம்மையாக செய்து முடிப்பதிலும் வெற்றியே பெற்றுக் கொண்டு இருக்கும், புரட்சித்தலைவர் ஒருகாரியம் செய்ய முற்படும் முன்னரே பலமுறை சிந்தித்து அறிஞர் பெருமக்களிடம் ஆலோசனை கேட்டு செயல்பட துவங்குவார்.

தற்போது இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையில் மிக சிந்தித்து அந்தநாட்டு தமிழர்களையும் காப்பாற்ற வேண்டும். அந்த நாட்டோடு ப்கையும் இருக்க கூடாது மேலும் நம்நாட்டு அரசியல் சிக்கலில்லாமல் இருக்கவும் வழிகள் வேண்டும் என்பதால் மிக தந்திரமாக இந்திரா அம்மையாரே நீங்கள் தலையிடுங்கள் என தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. இவைகளுக்கு தீர்வு காண ஐ. நா. சபைதான் உச்சகட்ட நீதிமன்றம். ஆகவே அந்த நீதிமன்றத்தில் நாம் கருத்தைக் சொல்ல வேண்டும். அதிலும் நம் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் சென்று பேசவேண்டும். அதிலும் முக்கிய பொருப்பேற்று அங்கு பேச வேண்டும் என தந்திரம் கையாண்டு இந்திரா அம்மையே ஐ. நா வில் எங்கள் மின் துறை அமைச்சரை பேச தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென

யூகம் சொல்ல, அதை அவர்கள் ஏற்று அப்படியே செய்து 90 நாட்கள் இந்தியக்குழுவின் முக்கிய பொருப்பில் இருந்து தமிழர்களின் கருத்துக்களை மிக தெளிவாக எடுத்துச் சொல்லி வந்தார். மின்துறை அமைச்சர் பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் அவர்களை அனுப்பி வெற்றிக் கண்டார். ஆனால் அந்த வெற்றி தமிழ் நாட்டுக்கும் தமிழ்மக்களுக்காகவும் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்-காகவும் சிறப்பான வெற்றியை தேடித் தந்தது. எப்படி இருந்தாலும் பிறந்த மண்ணுக்கும் தமிழ் மக்ளுக்கும் அந்த புகழ் சேர வேண்டும் என்பதால் இதை செய்து வெற்றிக் கண்டார்.

உதாரணமாகச் சொன்னால் ஸாலமன் என்ற மீன் எந்த ஒரு சிறிய நதியில் தோன்றினாலும், பெரிய நதியில் சேர்ந்து பிறகு கடலுக்கு சென்றாலும் வந்த வழியாக எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தான் பிறந்த, அந்த சிறிய நதியை அடையும். அந்த மீனை வேறு நதியில் போட்டாலும் தான் பிறந்த இடம் இல்லை என்று அது உணர்ந்து கொள்ள அந்த மீனுக்கு முடிகிறது, தெரிகிறது. பிறந்த இடத்தின் மதிப்பு மீனுக்கு இருக்கும் போது ஆறு அறிவு படைத்த மனிதனுக்கு இருக்காதா? ஆகவே தான் கருத்துக்களை ஐ. நா சபையில் அள்ளித் தெளித்து தாயகம் திரும்பினார் பண்ருட்டியார், தமிழன் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்கு அங்கு பிள்ளைகள் பிறந்தாலும் தன் முதியவர்கள் பிறந்த தமிழ் நாட்டு பற்று இருக்கும், அதை உதாரணத்திற்கு சொன்னால் ஈல் என்ற மீன் எந்த இடத்தில் பிறந்தாலும் அது வளர்ந்து வயது வந்த உடன் அமெரிக்காவில் உள்ள பெர்முடா என்ற இடத்திற்கு வந்து விடும். இங்கு வந்த பிறகுதான் இன பெருக்கம் செய்யும். அதன் பிறகு உயிர் விடும். (ஆதாரம், வி. ரவிச்சந்திரன் எழுதிய" அறிவுக்கு அப்பாற்பட்ட அதிசய சக்திகள்" என்ற புத்தகத்தில் உள்ளது) இப்படி ஒரு நிலையான இடத்தை

இந்த மீன் இனம் தெரிந்து வைத்துக் கொள்ளுகிறது. அந்த இடத்திற்கு பெருமை சேர்க்கிறது. அதைப் போல் தான் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ் நாட்டின் பெருமை களை மேலும் மேலும் ஒளி விட செய்ய பல திட்டங் களை தீட்டி வருகிறார்.

எம். ஜி ஆர். அவர்கள் தன் அமைச்சரவையில் இவரை அனுப்பினால் நல்ல முறையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லி வெற்றியுடன் திரும்பி வருவார் என்று உணர்ந்து பண்ருட்டியாரை அனுப்பினார்.

அவர் என்ன, இவரை அனுப்பினால் மற்ற அமைச்சர் கள் கோபப்பட மாட்டார்களா, நமக்கென்ன திறமை இல்லையா என எண்ணமாட்டார்களா, என்று எம். ஜி. ஆர் சிந்தித்து இருக்கமாட்டாரா, சிந்தித்து இருப்பார். திறமான பரிசீலனைக்குப் பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தார் வெற்றியும் கண்டார்.

அவரை வரவேற்ற விதம் பாராட்டு விழா நடத்திய பாங்கு, இவைகள் அவருக்கே உரித்தான தனிபாணி— எம். ஜி. ஆர் அவர்கள் தீர்க்கமாக உணர்ந்து தான் இப்படி ஒரு புகழை தன் நாட்டுக்கு சேர்த்துக் கொண் டார். ஐ. நா. சென்று வந்த பணருட்டியாரை, மனமாற உளமாற உச்சிமோந்து தன் கூடப்பிறந்த தம்பியாக வாரியணைத்துக் கொண்ட பாங்கு (சென்னை விமான நிலையத்தில் 25—12—83 அன்று) கண்கொள்ளாக்காட்சி. தம்பிமார்களை அறிஞர் அண்ணா எப்படி உளமாற நெஞ்சார பாராட்டினார்களோ, அதே பாதையில் இன்றைய அரசியல் தலைவர் எம். ஜி. ஆர் மக்கள் மனதில் நிறைந்து நிற்கிறார். எந்த காரியம் எடுத்துக் கொண்டாலும் திறமைக்கு, இவருக்கு இவரே நிகராவார். இப்படி ஒரு உத்தம சீலர் 20—ம் நூற்றாண்டில் நமக் கெல்லாம் கிடைக்கப் பெற்ற வரப்பிரசாதம். பல்வேறு அரசியல் தலைவர்கள், பல்வேறு கருத்துக்களைச் சொன்

னார்கள். ஆனால் நிலையாக நின்றவர் எம். ஜி. ஆர் ஒருவரே.

படைஎடுப்போம் என்றார்கள். படகில், இலங்கை செல்வோம் என்றார்கள், இந்திய இராணுவத்தை அனுப்பவேண்டும் என்றார்கள். ஜெயவர்த்தனே கொடும்பாவியை கொளுத்தினார்கள், தமிழக அரசின் செயல் சரியில்லை என்றார்கள். சட்டசபையில் வெளி நடப்பு செய்தார்கள். எதிர்ப்புத் தீர்மானங்கள் போட்டு பேசப்பட்டது. என்னென்ன விமர்சனம் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து, ஓய்ந்து போய் மற்ற வர்கள் அசந்த பிறகு, மலை அசைந்தாலும் தன் நிலை அசையாதிருந்த எம். ஜி. ஆர். இந்திராவை அணுகி இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையில் தாங்கள் தலை யிட்டு தீர்வு காண வேண்டும் என கேட்டுக் கொண்டார். அதற்குப் பிறகு அவர்கள் தூதுவர் ஜி. பார்த்தசாரதியை அனுப்பி இரண்டு முறை பேச்சு வார்த்தை நடந்தது. இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே தம்பி இந்தியாவுக்கு இலங்கை அரசின் தூதுவராக வந்தார், பேசினார்.

பிறகு இலங்கைத் தமிழர்கள் தலைவர் அமிர்த லிங்கம், தன் உயிருக்கு பாதுகாப்பு இல்லை. என்னை காப்பாற்றுபவர்கள் இல்லை எனப்பயந்த, அமிர்தலிங் கத்தை இலங்கை வட்டமேஜை மாநாட்டில் கலந்துக் கொண்டு தாங்கள் சிறந்த கருத்துக்களைச் சொல்ல வாருங்கள் என இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அழைத்தாரே, இது புரட்சித் தலைவர் பெற்ற வெற்றித் தானே.

தமிழ் பெண்களை மானபங்கம் படுத்திய சிங்களர் கள் இன்று நாங்கள் தவறுக்கு வருந்துகிறோம். இனி சகோதர பாசத்தோடு இருப்போம் எனவும், இலங்கை தமிழர்களுக்கு உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் தருகிறோம், என்று சொல்லுவதும் அவர்களுக்கு காவல

துறையிலும் இராணுவத்திலும் மற்றும் அரசு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு தருகிறோம், என்று சொல்லுவதும் எம். ஜி. ஆருக்கு கிடைத்த வெற்றி இல்லையா? எந்த காரியத்தை எடுத்தாலும் தீர்க்கமாக சிந்தித்து எப்படி சொன்னால் வெற்றிக் கிட்டும் என எண்ணி செயல்படுவது நல்லது அல்லவா! அதைத்தான் செய்தார். வெற்றியும் கண்டார். இன்னும் பல வெற்றிகளை காண இருக்கிறார்.

இவர் திறமை மிக்கவர் என்பதால் தான் அரசியல் ஜாம்பவான்கள் இந்திய அரசியலில் எம். ஜி. ஆர். அவர்களே நீங்கள் ஆலோசனை சொல்லுங்கள், நாங்கள் கேட்கிறோம், என்றார்கள். தென்னிந்திய முதல்வர்கள் மாநாட்டை கூட்டியவுடன் பல்வேறு பத்திரிக்கைகள் பல்வேறு கருத்துக்களை எழுதியது. ஒன்றும் தெரியாமல் எம். ஜி. ஆர் நடக்கிறார் என்று யாராவது கருதுவார்களானால், அவர்கள் கருத்தில் கோளாறு எனப்பொருள். இன்றும் வடநாட்டுத் தலைவர்கள் எம். ஜி. ஆர். அவர்களை பலமாக மதித்து நடந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக வெற்றி என்பது நாட்டின் தலைவரிடம் உள்ளது. அந்த தலைவரும் சிந்தித்து செயல்படும் தலைவராக இருக்க வேண்டும்.

இப்படி வெற்றிமேல் வெற்றிகளைக்கண்டு கொண்டு இருக்கிறார் எம். ஜி. ஆர் எப்படி? கலைத்துறையில் மக்களுக்கு அரிய கருத்துக்களை எளியமுறையில் தெரிந்துக் கொள்ள தான் எப்படி காரணமாக இருந்தாரோ, அதே நிலையில் இன்று அரசியலிலும் செயல் படுகிறார். இவர் வெற்றித் திருமகன்.

# பட்டமும் புரட்சி தலைவரும்

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்,**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு,**

எண் என்று சொல்லப்படுவதும் எழுத்து என்று சொல்லப்படுவதும் ஆகிய இருவகை கலைகளையும் பகற்று வாழும் மக்களுக்குக் கண்கள் என்று வள்ளுவர் கூறுகிறார்.

நாட்டில் பட்டம் பெற்றவர்கள் தான் அறிவாளிகள். படிக்காத மக்கள் அறிவு, ஆற்றல் இவைகளின் சிறந்து விளங்கவில்லையா?

இந்த நாட்டில் பட்டப்படிப்பு பல்கலைக் கழகங்கள் எப்போது தோன்றியது. அதற்கு முன்னால் இருந்த புலவர், அறிஞர், பேன்றவர்கள் எழுதிய நூல்களைத் தானே பல்கலைக்கழகங்கள் ஆராய்ந்து கொண்டு இருக் கின்றன. கம்பன், ஔவையார், இளங்கோவடிகள்: வள்ளுவர் போன்ற மாபெரும் அறிஞரெல்லாம். எந்த கல்லூரியில் பயின்றார்கள். அவர்கள் எழுதிய புத்தகங்கள் சான்றோர் அவையில் எடுபடவில்லையா?

இந்த நவீன காலத்தில் அந்த புத்தகங்கள் தானே இன்றைக்கு படிக்கும். மாணவர்களுக்கு பாடபுத்தமாக உள்ளது. அன்று நாடாண்ட சேரன், சோழன், பாண்டியன் போன்ற அரசர்கள் இவர்கள் ஆட்சியில் வாழ்ந்த சிற்றரசர்கள் போன்றோர்கள் எந்த கல்லூரியில் பயின்று அரசாட்சி செய்தார்கள். அந்த கால மக்களுக்கு வேண்டியவைகளை செய்து புகழ் பெற வில்லையா. கல்லணை கட்டியது எந்த பெரியார் மூளையில் உதித்தது! படிக்காத கரிகால் சோழன்தான் கட்டினான். தஞ்சையில் இராச ராச சோழன் திருக்கோயில் சிறப்பை மறக்க மறுக்கமுடியுமா. இராமேஸ்வரம் ஆலயம் கடலில் கட்டி

உள்ள அந்த தூண்களை தூக்கி நிறுத்த எந்த பலு தூக்கும் இயந்திரம் இருந்தது. சிந்தித்தால் புரியும். பட்டம் பெற்றவர்கள் மட்டும அறிவாளியாக ஏற்பது எந்த வகையில், நியாயம்.

படிக்காத பெருந்தலைவர் காமராசர் தமிழ் நாட்டையும் இந்திய நாட்டையும் ஆண்டார் பல திட்டங்களை தீட்டினார்.

படிப்பு என்பது கல்லூரி சென்று படித்தால்தானா? வீட்டில் இருந்து எல்லாவித கல்வியும் பெற்று திறமைசாலி ஆகமுடியாதா. அப்படி ஆனால் அவன் திறமையை ஏற்கலாகாதா. புலமைக்கு சிறந்து விளங்கிய கண்ணதாசன் பட்டதாரியா. இப்படி படிக்காத மேதைகள் இந்த தமிழ் நாட்டில் வாழ்ந்து புகழைபெற்றார்கள் என்றால் எப்படிமறுக்க முடியும்.

**1974** திருவான்மியூர் மாநாடு கழக முதல் மாநாடு (அ. இ. அண்ணா திமுக) அதில் நான் அந்த மாநாட்டு பணிக்கு வேலைசெய்து வந்தேன். அந்த இடம் முள்காடு. இன்று அந்தஇடம் வீட்டுவசதி வாரியத்தால் சொர்க்க புரியாக மாற்றி இருக்கின்றார்கள். அப்போது வேலிக் காத்தான்முள் என் காலில்தைத்தது. அது காரணமாக என் உடம்பில் தடிப்புகள் ஏற்பட்டது.

ஜேப்பியாருடன் நானும் தமிழ்மணி தா. சதாநந்தம் வா. கோதண்டராமன், சா. கோவிந்தசாமி, சைதை கண்ணன், தி. நகர்மணி, ஆகிய நாங்கள் ஒன்றாக பணி செய்தோம். மாநாடு சம்மந்தமாக தலைவர் எம். ஜி. ஆர் அவர்களை பார்க்க சென்றோம். அவரை பார்த்து பேச போனதும் என்னை பார்த்து என்ன முகத்தில் வீக்கம் உள்ளது என்று கேட்டார். நான், நேற்று முள் குத்தியது, இன்று இப்படி வீங்கி விட்டது என்றேன். உடனே ஒரு மருந்தின் பெயரைச் சொல்லி எழுதிக் கொடுத்து வாங்கி சாப்பிடு என்றார். உடனே ஆச்சரியமாக எப்போது

டாக்டருக்கு படித்தார் என்று கருதினேன். அவருக்கு தற்போதுதான் டாக்டர் பட்டம் கிடைத்துள்ளது.

இப்படி ஆங்கிலம், தமிழ் மொழியில் மிக அறிய செல்வத்தை இளமையில் கற்க முடியவில்லை என்றாலும் பிறகு படித்து திறமை பெற்று நல்லாட்சி செய்து வரும் அந்த அறிவின் சிகரத்தை பட்டதாரியா? என்று கேட்கும் மக்களை என்ன சொல்வது என்று புரியவில்லை.

இதனால் தான் வள்ளுவர் சொன்னார், எண், எழுத்து இவைகளை கலைகள் என்றார். அந்த கலையை மெத்த படித்தவர் நம் தலைவர். மேலும் இவர் கலையில் மிகச் சிறந்தவர். இவர் இன்று வள்ளுவர் சொன்ன அனைத்து தகுதியும் பெற்றவர் என்பதை யார் மறுக்க முடியும். இப்படி படிக்காத மேதையாக இருந்து தமிழகத்தை சிறப்பான வழியில் நடத்துகிறார். இவர் தான் பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், காமராஜர், அண்ணா, பெரியார் போன்ற தமிழ் பல்கலைக்கழகங்கள், துவங்கினார். பின் உலகத் தமிழ் மாநாடு, நாடு போற்றும்படி நடத்தினார். தற்போது தொழிற் கல்வியை துவக்கி உள்ளார். தனியார் தொழில் கல்வி நடத்த அனுமதி அளித்துள்ளார். கல்விக்கு 1/3 பங்கு அரசு வருமானத்தில் செலவு செய்கிறார்.

பஞ்சாயத்து ஒன்றிய பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியராக்கினார். எல்லா கிராமங்களிலும் பள்ளிகள் அமைத்தார். இது போன்ற சேவைகளை செய்யும் எம். ஜி. ஆர் கல்விக்கு வித்தாக விளங்குகிறார். கல்வியை பற்றி மெத்த அறிந்தவர். குறள் பாதையில் அவர் வழி நடக்கின்றார்.

கலை வளர்ச்சியில், கட்சி வளர்ச்சி இருக்க கூடாது இரண்டும் விளங்காமல் போய்விடும். கட்சியை வளர்க்க கலையை உபயோகிக்கலாம். ஆனால் கலையை வளர்க்க கட்சியை உபயோகிக்க கூடாது.

**நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்**
**நச்சு மரம் பழுத்தன்று,**

அருமையான ஆழமான கருத்துள்ள குறள். எவ்வளவு செல்வம் பெற்று ஒரு மனிதன் வாழ்ந்தாலும் அதனால் புகழ் எய்துவது இயலாது. அந்த செல்வத்தை நல்ல காரியங்களுக்கு ஏழைகளுக்கு உதவி செய்து வாழ்ந்தால் தான் அவன் புகழ் வானளவு உயரும் என்பதையும் நாடு அறியும்.

இதை வள்ளுவர் மிக அழகாக ஆழமாக சொல்லு கிறார். ஏழைகளுக்கு உதவாத பணம் இருப்பவனை நடு ஊரில் நச்சு மரம் பழுத்து நிற்பது போல் என்கிறார். இதனால் எம். ஜி. ஆர் அவர்கள் ஏழைகளுக்கு வாரி வழங்கினார். ஏன் தெரியுமா? "நான் ஏழையாக இருந்து சிறிய வயதில் தந்தையை இழந்து மிக கஷ்டப்பட்டேன்' ஆக எனக்கு ஏழைகள் கஷ்டம் தெரியும் என்றார். ஆகவே ஏழைகளுக்கு உதவ நான் முன்னே நிற்கிறேன்" என்றார்.

நாட்டில் புயல், வெள்ளம், தீ, இவைகளுக்கு தான் திரைப்படங்களில் நடித்து சம்பாதித்த பணத்தை ஆயிரக் கணக்கில் கொடுத்து வந்தார். அவர் எம். எல். ஏ. வாக இருந்த பரங்கிமலை தொகுதியில் ஏழைகளுக்கு புயல் நேரங்களில் அரிசி இனாமாக கொடுத்து உதவினார். சொந்த பணத்தில் சில கிராமங்களில் ரோடு, பாலம், இவைகளை அமைத்து கொடுத்து இருக்கிறார். ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு இனாமாக திருமணம் தன் சொந்த செலவில் செய்து வைத்துள்ளார். ஏழைப் பிள்ளைகளை படிக்க வைத்து இன்னும் நல்ல பழக்கத்தில் வைத்துக் கொண்டு இருக்கிறார். அந்தப் பிள்ளைகளுக்கு உடை, உணவு, போன்றவைகளுக்குப் பணமும், பள்ளிக்கு சம்பளமும் இன்றும் கட்டிக் கொண்டு இருக் கிறார்.

உலக நாடுகளில் சண்டை என்றால் அதற்கு உதவித் தொகை மத்திய அரசுக்கு கொடுத்துள்ளார். அண்டை மாநிலத்தில் வெள்ளம் புயலால் மக்கள் பாதிக்கப் பட்டால் அதற்கும் உதவி செய்துள்ளார். கண்ணதாசன் என். எஸ் கிருஷ்ணன் போன்ற பல்வேறு முக்கியஸ்தர் களின், வீடுகள் ஏலம் போனபோது கடன்பட்ட பணத்தை கட்டி வீட்டை மீட்டுத் தந்துள்ளார். இவைகள் யாவும் சொந்த பணத்தில் இதுபோன்ற காரியங்களை செய்து வந்தார், நடிகராக இருந்த போது. ஆட்சியாளராக வந்த பிறகு ஏழைகளுக்கு மிக அத்தியாவசியமான வேலைகளை தாராளமாக செய்து வருகிறார்.

1. குடிநீர் திட்டம், ரூ—40 கோடி,
2. சத்துணவுத் திட்டம், ரூ—200 கோடி
3. அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு,
4. போக்குவரத்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, போனஸ்.
5. ஆசிரியர்களை அரசு அதிகாரிகளாக்கியது, பதவி உயர்வுகள் அளிப்பது.
6. தமிழ்ப்புலவர்களுக்கு உதவித் தொகை.
7. அரசியல், பெரிய தலைவர்கள் மறைந்தால் அவர் குடும்பத்திற்கு உதவிகள்.
8. இலங்கை தமிழர்கள், அநியாயமாக இறந்த குட்டிமணி, தங்கத்துரை, இவர்கள் குடும்பத்திற்கு உதவித்தொகை, சொந்தவீடு.
9. மீனவர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம், புயல்கால உதவித் தொகை.
10. விவசாயிகளுக்கு 200 கோடி கடன் தள்ளுபடி செய்தல்.

காவல் துறையினருக்கு குறைந்த விலையில் அரிசி கொடுத்தல் ஏழைகளுக்கு நிலம் கொடுப்பது, நலிந்தோருக்கு உதவித் தொகை அளித்தல், முதியோர் விதவைகளுக்கு உதவித்தொகை அதிகரித்தல், ஆதரவற்ற முஸ்லிம்களுக்கு உதவித் தொகை, ஏழைகளின் மீது வரிபோடாமல் இருப்பது, இப்படி எழுத்தில் அடங்காத உதவிகளை செய்து வருகிறார். ஆகவே தான் ஏழைகளின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்துள்ளார். இவர் உள்ளவரை இவரை எதிர்த்து அரசியலில் வெற்றிப் பெற இன்னும் யாரும் பிறக்கவில்லை. பிறக்கப் போவதும் இல்லை.

# சிந்தனையின் சிகரம்

**செயற்கரிய செய்வார், பெரியர் சிறியர்,**
**செயற்கரிய செய் கலாதார் —26**

ஒரு காரியத்தை அறிவுள்ள பெரியவர்கள் அறிந்து தெரிந்து, புரிந்து, தீவிர ஆலோசனை செய்து அந்த காரியம் முடியுமா, என்பதை அறிந்து செய்வார்கள். சிறியவர்கள் அதை சிந்திக்காமல் திடீர் என்று செய்வார் கள். காரியம் நடைபெறாமல், சிறு பிள்ளைத்தனம் என்பார்கள். எம். ஜி. ஆர் அவர்கள் தி. மு. க.வை விட்டு வெளிவர வேண்டும் என்ற எண்ணத்தில் கணக்கு கேட்கவில்லை. நம்மை நம் இயக்கத்தை யாரும் தவறாக சொல்லக் கூடாது, நினைக்க கூடாது. என்றுதான் தவறு இருந்தாலும் திருத்திக் கொள்ளலாம். என்றுதான் கேட் டார்கள். கலைஞர் கருணாநிதி அவர்கள் கோபப்பட்டு என்னையே கணக்கு கேட்க உனக்கு என்ன தைரியம், சாதாரண நடிகன் நீ, என்னையா கணக்கு கேட்கிறாய், என பலவித விமர்சனங்கள் செய்து கீரலை பெரிது படுத்தினார். உடனே அவரை கட்சியில் இருந்து நீக்க ஏற்பாடு செய்து நீக்கினார். இருந்தும் தலைவர் பொருமையாக இருந்தார். கருணாநிதி அவசரப்பட்டார். கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து மற்ற தலைவர்களை விட்டு பேச வைத்து இருக்கலாம். சமரசம் செய்ய முயன்று இருக்கலாம், அவர் செய்யவில்லை. இடையில் மற்றத் தலைவர்கள் கடுமையான விமர்சனம் செய்தார் கள். அதையும் அவர் தடுக்கவில்லை.

மாறாக பிளவுபடும் அளவுக்கு காரியம் பெரியதாகக் கொண்டு போனார். சமரச முயற்சிக்கு இறங்காததால் விளைவு இன்று வேறு விதமாக ஆனது. 1972-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி புதிய இயக்கம் தோன்றும் வரை தலைவர் பொருமையின் சின்னமாக

விளங்கினாா. அண்ணு சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து வந்தார். எங்கும் மக்கள் எழுச்சி தலைவர்கள் தி. மு. கவின் தொண்டர்கள், எல்லாம் எம். ஜி. ஆர் பக்கம். மக்கள் அலைக்கடல் அலைப் போல் தலைவரை பார்க்க வந்த வண்ணம் இருந்தனர்.

நாட்டில் தி. மு. க கூட்டம் நடைப் பெற முடிய வில்லை. தி, மு, க தலைவர்கள் வெளியில் சென்று கூட்டம் பேச முடியவில்லை. எங்கு பார்த்தாலும் தொண்டர்கள் எம். ஜி. ஆர் வாழ்க! என்ற குரல். வாகனங்களில் எம். ஜி. ஆர் வாழ்க! என எழுதினால் தான் சாலையில் வண்டிகள் ஓடும் நிலை. தினம் செய்தித் தாள்களைப் பார்த்தால், தி. மு. க மன்றம் கலைக்கப் பட்டது. வட்டச் செயலாளர்கள் எம். ஜி. ஆர். அணியில் சேர்ந்தார்கள். சில முக்கியஸ்தர்கள் வந்தார்கள் என்றும் பலர் இணைந்தார்கள் என்றும் செய்தி, தினம் வந்த வண்ணம் உள்ளது. மனிதனுக்கு அப்பாற்ப்பட்ட சக்தி உண்டு. அதன் தன்மைகள் புரட்சித் தலைவருக்கு தீர்க்கமாக தெரிகிறது.

7-7-1872 ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஒரு கிராமத்தில் ரஸ்புடீன் என்பவர் பிறந்தார். வளர்ந்து, பிறகு மகா முரடனாக மாறினால், மிருகம் போன்று வளர்ந்து இருந்தான். அவனை கண்டால் அனைவரும் பயந்து நடுங்குவார்கள். மிகக் கொடியவன்—யாரும் கண்டால் அவனுக்கு கப்பங்கட்ட வேண்டும், லஞ்சம் கொடுக்க வேண்டும்.

இவர் கிறிஸ்துவர், இவன் எல்லா இடங்களிலும் தகராறு செய்வான். இதனால் இந்த ஊரில் உள்ள ஒரு பாதிரியார் தினம் லஞ்சம் கொடுத்து வந்தார். ஏன் தெரியுமா? ஞாயிற்றுக் கிழமையில் வந்து வம்பு செய்தால் ஆலயத்தின் புனிதம் கெட்டு விடும் என்பதால். இவன் கொஞ்சம் நாள் காணவில்லை. 5-2-1903—ல் திரும்பி

வந்தான். வந்தவன் நான் திருந்தி வந்துள்ளேன். இனி கொடுமைகள் செய்ய மாட்டேன். நான் ஆலயத்தை பெரிதாக கட்ட போகிறேன் என்றான். பல அதிசய மான வேலைகளை செய்தான். மக்களும் நம்பினார்கள். ஆனால் கொஞ்ச நாள் கழித்து வீதியில் குடித்து 'விட்டு கொட்டம் அடித்துக் கொண்டு இருந்தான். இவனை திருத்த முடியாது என மக்கள் நினைத்தார்கள்.

அதுபோல் தலைவர் எம். ஜி. ஆர் ஒரு முடிவுக்கு வர பல நாட்கள் ஆகியது. பிறகு நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள், செய்தித்தாளில் படிக்க முடிந்தது. சிலர் தாமரை கொடி ஏற்றினார்கள். பல்வேறு பெயர்கள் கூட வைத்தார்கள். (இயக்கத்திற்கு) இதற்கு பிறகு தான் அண்ணா தி. மு. க. என பெயர் வைத்தார், அன்று வேகமாக நடந்தது. அவரை நம்பி இந்த நாட்டு மக்கள் சென்றார்கள். இன்று மக்களுக் காக வாழ்ந்து வருகிற தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் எந்த காரியத்தை எடுத்துக் கொண்டாலும் ஒழுங்காக செய்து முடிப்பார்.

இவர் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்தது தீர்க்க தரிசனம். அதில் மாற்றம் இருந்தால் அவர் ஜெயிக்க முடியாது. சென்னையில கடந்த 1980—ல் பொதுத் தேர்தல். முனுஆதி, ஐசரிவேலன் இந்த இரண்டு பேர்களுக்கு சீட்டு கொடுக்கவில்லை. இந்த இரண்டு பேர்களும் அவரிடம் சண்டையிட்டு மீண்டும் சீட்டுப் பெற்றார்கள். விளைவு இரண்டு நபர்களும் தோற்றார்கள்.

அவர் கட்சி ஆர்வத்தில் ஆவடி மாநாட்டுக்கு செலலுகிறார். வழியில் தி. மு. க. காலிகள் அவரை வழிமறித்து தாக்கி இருக்கிறார்கள். இவர் போன வண்டியை ஆவடிக்கு முன்னால் நிறுத்தி வேறு வண்டி யில் ஏறி மாநாட்டுக்கு செல்லுகிறார்கள். அவர் வண்டி

பின்னால் வருகிறது. அந்த வண்டியை தாக்கினார்கள். இப்படி பல சம்பவங்கள் விமானத்தில் ஒரு முறை டெல்லி செல்ல இருந்தார். ஏனோ அந்த விமானத்தில் அவர் போகவில்லை. அந்த விமானம் தரையில் மோதியது. இப்படி எதையும் தீர அறிந்து புரிந்து செயல்படக் கூடியவர் எம். ஜி. ஆர். மனிதன் சக்திக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தி அவரிடம் உண்டு.

வரலாறு காணாத வகையில் விவசாயிகளுக்கு 200 கோடி கடனை தள்ளுபடி செய்தார். இந்திய பேரரசை கேட்கவேண்டும். ஆனால் கேட்க வில்லை. பிறகு கேட்பேன். இந்திய பேரரசு கொடுக்க மறுத்தால் மாநில நிதியில் இருந்து இந்த கடனை நான் கொடுப்பேன் என்றார், திட்டம் தீட்டலாம். அது நீண்ட நாள் நிலைக்க வேண்டும். எங்களுக்கு அவர் செய்த உதவியை இந்த சந்தர்பத்தில் நான் சொல்லியாக வேண்டும்.

நான் சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு மீனவர் கூட்டுறவு சங்கம் அமைக்க தலைவரிடம் மனு கொடுத்தேன். அப்போது மீன்துறை அமைச்சர் திரு. ஜி. ஆர். எட்மண்ட். தலைவர் என்னிடம் சொன்னார். மீன்துறை அமைச்சரிடம் மனு கொடுத்தாயா? என்றார் கொடுத்தேன் என்றேன். பிறகு நீ போ, நான் கொடுக்க செல்கின்றேன் என்றார். பிறகு மீன்துறை அமைச்சரை பார்த்தேன்.

பிறகு 1981-ல் எனக்கு தென் சென்னை உள்நாட்டு வேலர் மீனவர் கூட்டுறவு சங்கம் பெற்றேன். அவர் சொல்லியதால் விரைவில் எனக்கு சங்கம் கிடைத்தது. இந்த சங்கத்தில் 450 உறுப்பினர் இன்று இருக்கிறார்கள், என்றால், முடிந்த அளவு பாடுபட்டு மத்திய மாநில அரசு அதிகாரிகளை அணுகி. உதவிகளை பெற்றுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். இவ்வளவு மீனவர்கள் இன்று நலன் பெற காரணமாக இருந்தவர் எம். ஜி. ஆர். அவர்கள்.

ஆரம்பத்தில் கூட்டுறவு சங்கம் மூலம் பிராந்தி கடை வைத்து இருந்தேன். அதன் மூலம் நல்ல லாபம் கிடைத்தது. ஓர் ஆண்டு காலத்தில் 3 லட்சம் லாபம் கிடைத்தது. அதன மூலம் நான் இன்று சங்கத்தை வளமாக நடத்த முடிகிறது. அந்த பணத்தை முதலாக வைத்துக் கொண்டு நகைக்கடன் கொடுக்க, மீன் துறை மூலம் அனுமதிபெற்று நடத்தி வருகிறேன். இதனால் ஏழை மீனவர்கள் இன்று நன்மை பெறுகிறார்கள். மத்திய தேதிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 60 மீனவர் உறுப்பினர்களுக்கு ரூபாய் 4000—வீதம் மரம் வலை பெற்றுத் தந்தேன். ரூ. 2, 40, 000/—மானியம் ரூ. 60, 000/— பெற்றுத்தந்தேன்.

மீனவர்களுக்கு 400 நபர்களுக்கு குறைந்த வட்டியில் நகைக்கடன் கொடுத்துள்ளோம். ரூ. 1. 25 வட்டிக்கு மற்ற வர்களுக்கும் நகைக்கடன் கொடுத்து வருகிறேன், மேலும் இதற்காக சென்னை மத்திய கூட்டுறவு வங்கியில் 3 லட்சம் கடன் பெற்று உள்ளோம். நகை கடனுக்காக. மேலும் 120 பெண்களுக்கு தலா ரூ. 1000/- வீதம் 1. 25 ரூபாய் வட்டிக்கு கொடுத்து இருக்கிறோம். மேலும் 60 ஆண்களுக்கு ரூ. 4000/- வீதம், இந்திய மீனவர் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கடன் பெற்று அதன் உத்தரவு வர இருக்கிறது,

கண்ணாடி இழைப்படகு எங்கள் சங்கத்திற்கு 10 படகு கொடுக்க இருக்கிறார்கள். ரூ. 8. 50, 000/- மாநில அரசு கொடுத்து இருக்கிறது. படகு கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் 50 மீனவர்கள் குடும்பம் பிழைக்கும். என். சி, டி. சி. மூலம் 5 விசைப்படகு கேட்டு மனு செய்து உள்ளேன். அது கிடைக்கும் நிலையில் உள்ளது. இன்னும் அதே இடத்தில் 10 படகு கேட்டு இருக்கிறேன். அடுத்த ஆண்டுக்கு மனு செய்து இருக்கிறேன். இப்படி பல நன்மைகள் செய்துக் கொண்டு வரு

கிறேன். மேற்கண்ட கூட்டுறவு சங்கம் பெறும் பயனாக இருக்கிறது.

சேப்பாக்கம் எழிலகத்தில் பின்னால் காலி இடத்தில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஒரு பங்கு கொடுத்து இருக்கிறார்கள். அதில் மீன் வியாபாரம் செய்து அதில் 2 நபர்களுக்கு வேலை கிடைக்கும். தற்போது 7 நபர்கள் வேலை செய்கிறார்கள். சங்கம் வாடகைக்கு இடம் எடுத்து முறையாக அலுவலகம் நடந்து வருகிறது. இவ்வளவு நடக்கவும் எனக்கு சங்கம் பதிவு செய்து கொடுத்த ஜி. ஆர். எட்மண்ட் அவருக்கு, உத்தரவுவிட்ட தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களை சாரும்.

இது போன்ற நல்ல காரியங்களில் தீர விசாரித்து நல்ல காரியங்களில் நல்ல திறமையுடன் காரியம் செய்து முடிப்பார்கள். அவர் திறமையானவர் என்பதை நாடே உணர்ந்து இருக்கிறது.



# சிறிது நேர சிந்தனைகள்

கணவன் மனைவி தகராறுக்கு
வேறு நபர் பஞ்சாயத்து கூடாது.

பெண்ணின் பெருமை அந்நாள்
பெண்ணின் ஆணவம் இந்நாள்.

உழைத்து ஊதியத்தை பெருக்கு
ஊதாரிதனத்தை சுருக்கு.

கனவு என்பது பொய்என்ற காலம்போய்
கனவுப்படி நடக்கும் காலம் இது.

சிந்தனை என்பது சிறிது நேரமே
அதுவே முழுநேரம் இருக்ககூடாது,

அதிகாரி வெளியில் உத்தமனாக நடிக்கிறான்
உள்ளுக்குள் ஊரை நம்பவைக்கிறான்.

மீன் மட்டுமே கலப்படமில்லாத உணவு.
வேறு உணவெல்லாம் கலப்பட உணவு.

கடல் அலையும் ஓயலாம்
பேராசைகாரன் மனஅலை ஓயாது.

உத்தமன். அதிகம் பேசமாட்டான்.
அயோக்கியன் பேசாமல் இருக்கமாட்டான்.

பணம் உள்ளவனுக்கு அடக்கம் தேவை
பணம் உள்ளதால் நூறுருபாய் நோட்டை சட்டையில்
மேல் தெரியும்படி வைக்ககூடாது

அரசியல் அயோக்கியனின் கடைசி அடைக்கலம் அன்று
அரசியல் அனைவருக்கும் புகலிடம் இன்று.

வீரனுக்கும், கோழைக்கும், பகைவனுக்கும்,
விபச்சாரிக்கும், பத்தினிக்கும், படித்தவனுக்கும்,
படிக்காதவனுக்கும்
ஏழைக்கும், பணக்காரனுக்கும் இன்று அரசியல்
பாதுகாப்பு.

பெண் என்றால் பேயும் மனம் இறங்கும் அன்று
பெண்ணை கண்டால் பேயும் ஓடும் இன்று.

பத்தினி என்றால் எங்கே விற்கிறது,
பெரும்பாலான பெண்களை பற்றிய கேள்வி.

மீனும் மருந்து பொருள் தான்,
சுரா மீன் நரம்பு தளர்ச்சி நீங்கும்,

காரல் மீனைக் கண்டால் சுரம்
தானாக ஓடும் சுண்ட வைத்தால்.

சர்க்கரை. சளி ரத்தகொதிப்பு இவைகளுக்கு
நல்ல உணவு நெத்திலி மீன்.

நோஞ்சான்களுக்கு கொடுக்க வேணும்
வஞ்சரம், வவ்வால், இரால், பாரை.

படிப்புக்கு தலைவணங்கு இன்று,
திறமைக்கு தலை வணங்கு இன்று.

திறமை என்பது அன்று வள்ளுவன் கண்டது,
படிப்பு என்பது இன்று பட்டதாரிகள் கண்டது.

வரதட்சணை என்பது விஷ மருந்து
வாங்காமல் இருப்பது அரு மருந்து.

ஆணும் பெண்ணும் விரும்பிய வர்களுடன்
ஜாதி அற்று சேர்ந்து வாழ்வது நல்லது,

பெண் என்றால் கண்ணகியின் வாழ்வா,
சிறிது காலம் வாழ்ந்த மாதவியின் வாழ்வா,

எந்த பெண்ணும் கண்ணகின் இருதி செயலில்
ஈடுபடாமல் இருப்பது நல்லது.

ஐந்து அறிவு பெற்ற கிளியிடம்
ஆறு அறிவு பெற்ற மனிதன் ஜாதகம் கேட்பது முறையா?

ஆடவனுக்கு எல்லாம் மனைவியிடம் கிடைத்தால்
ஏன் வெளியில் வேசி வீட்டுக்கு போகிறான்.

காக்கைக்யை ஒற்றுமைக்கு உதாரணம் காட்டுகிறோம்
அதற்கு சமம் கூட மனிதன் இல்லையே,

பொறாமை நம்முடன் பிறந்ததா
இடையில் வந்ததா?

இந்தியாவில் ஆண்கள் பிறப்பது மிகக் குறைவு,
ஏன் கலப்பட உணவால்.

குழந்தைகள் பிறக்கும் போதே
நோயாய் பிறக்கிறது, ஏன் நவீன மருந்துகளால்

போலியோ நோய் எப்போது வந்தது.
அதற்கு மருந்து எப்போது கண்டார்கள்.
இரசாயன உணவு இல்லை என்றால் போலியோ
மருந்தும் தேவையில்லை.

இன்றும் இருப்பவன் கொடுக்க மறுக்கிறான்.
ஏழையிடம் இருந்து எடுக்க விரும்புகிறான்.

சிங்கம் கூட தண்ணீரை கண்டால் சிறிது அஞ்சும்,
மீனவன் புயல் கடலில் விளையாடுகிறான்.

மேலை நாட்டில் மீன் பிடிப்பவன் காரில் போகிறான்;
இந்தியாவில், மீனவன் சைக்கிள் கூட இல்லாமல்
இருக்கிறான்

உதாரணத்துக் கூட சத்தம் போட்டால்,
இது என்னபின் கடையா, என்கிறார்கள்.

மீனவர்கள் சண்டை தீர வழி உண்டா!
கூட்டாக ஒரு இடத்தில் வாழாமல் இருந்தால் உண்டு.

மீனவர்கள் தகராறு தீருமோ?
படிப்பு அறிவு இருந்தால் தீரும்.

மீனவர்கள் வாழ்க்கைத் தரம் உயர வழி உண்டா,
சொந்த தொழில் செய்தால் இழிவு இல்லை என்று நினைத்தால் உண்டு.

மீனவர்கள் குடும்பம் முன்னுக்கு வர வழி பிறக்குமா?
சேமிக்கும் பழக்கம் இருந்தால் வழி பிறக்கும்.

மீனவர்களுக்கு நல்ல குணம் வளருமா?
புறம்பேசுவோருடன் சேராமல் இருந்தால் வளரும்.

மீனவர்கள் பொருள் சேர்க்க முடியுமா,
குடி பழக்கத்தை விட்டால் முடியும்.

மீனவன் தன்னை அந்தஸ்து உள்ளவனாக வளர்த்துக் கொள்ள முடியுமா,
முன் கோபத்தை விட்டால் முடியும்.

மீனவர்கள் மேலும் வளர வழி உண்டா,
நவீன முறையை ஏற்றுக் கொண்டால் உண்டு.

பொது உடமை தத்துவம் மீனவர்கள் ஏற்பார்களா?
ஏற்றால் அனைவரும் தடங்கல் இல்லாமல் பிழைக்க வழி விட வேண்டும்.

சிரிப்பு என்பது எப்போது வருகிறது.
சிந்திக்க மறுக்கும் போது வருகிறது.

சிறித்து வாழ்பவன் மனிதன்,
சிந்தித்து வாழ்பவனும் மனிதன்.

ஒருவனுக்கு புகழ் மட்டுமா கிட்டும
இகழ்வும் கிட்டும் மறுக்கக் கூடாது.

உதவி செய்பவனை உதட்டு வரை நினைப்பது
உத்தமனுக்கு அழகல்ல.

பிறர் இகழ்ந்து பேச,
நாம் வாழ்வது வாழ்வல்ல,

முதலில் வீட்டை பார்க்க வேண்டும்,
பிறகு நாட்டுக்கு செல்க.

மனைவியாக இருந்தாலும் அறைக்கு தான்,
வீதிக்கு அல்ல.

மனைவிக்கு முழுவதையும் கொடுத்து—அன்பை
அவளிடம் முழுமையும் எதிர் பார்க்க வேண்டும்.

பெற்ற தாய் தந்தையரை,
நித்தம் மதிக்க வேண்டும்.

பெற்றோரை மதிக்காதவன்,
மனிதனல்ல.

தாய் வயிறு எறிய வாழ்வது,
ஒரு வாழ்வா?

தந்தையை எதிர்ப்பவன் சரியான
மகனும் அல்ல.

மனைவி எதிரில் தாயை இழிவாக பேசினால்
அவன் மகன் பதில் விரைவில் கிடைக்கும்.

பெற்ற தாய் மனது ஒரு நாளும்
நோகாமல் காப்பவன் மக்கள்.

தாய் விட்ட கண்ணீர், கூரிய
வாளுக்கு சமம்.

மாதாவாய் இருக்கலாம்.
மாற்றான் தாயாக இருக்கலாம்.

மாற்றான் தாய் பிடியில் பிள்ளைகளை
வளர்க்கும் படி செய்பவன் முட்டாள்

தாய் தன் குழந்தையை வளர்ப்பது போல்
தந்தை வளர்க்க மாட்டான்.

தாய் கங்காரு போன்றவர்கள்,
தந்தை நாயை போன்றவன், பிள்ளைகளை வளர்ப்பதில்,

தாய் சொல்லை கேட்பதால்—பிள்ளைகள்
கெட்டு போக மாட்டார்கள்.

10 மாதம் சுமந்து பெற்று 20 வயது வரை வளக்கும்
தாய்—பேச்சைவிட—பிறகு வந்த மனைவி பேச்சு
உயர்ந்தால்
பிள்ளை கோழை என்று பொருள்.

தாய்க்கு கோயில் கட்டியவர் உண்டா?
உண்டு, புரட்சித்தலைவர் அவர்கள்

தாய்க்கு பின் மனைவி,
இரண்டு சேய்க்கு பின் ஓய்வு.

தாயா அவள்—எனக்கு
பேயானால் கொடுமை பட்டவன் குரல்.

தாய் தன் பிள்ளையை வேசிதனம் செய்தும் காப்பாள்,
தந்தை பிள்ளையை பட்டினி போட்டு கொள்வான்.

தாய் முக்கியமா தந்தை முக்கியமா!
பூமா தாய் தான் முக்கியம்

ஆலயத்தை சுற்றுவதை விட
தாய் தந்தையரை சுற்று

அய்யன் ஆலயமா—நாட்டில் அதிகம் இல்லை?
அம்மன் ஆலயம் தான் நாட்டில் அதிகம்.

தந்தைகள் ஆண்டார்கள் இந்தியாவில் குறைந்த நாட்கள்
தாய் ஆள்கிறார்கள் இந்தியாவில் அதிக நாட்கள்.

வீரம் தேவை மனிதனுக்கு—அதில் கோழை தனம்
கலந்த வீரம் தேவையில்லை.

வாழ்வில் வீரனாக வாழ் ஒரு
கோழையாக இருக்காதே.

எத்தனை தொழிற் பேட்டை இருந்தால்—என்ன
விவசாயத் தொழில் வளர்ந்தால் என்ன.

உணவு என்பது விளை பொருள் தான்,
அதை உடனே செய்து விட முடியாது.

எந்த தொழிலும், விவசாயத்துக்குப் பின் தான்.
உணவுக்கு ஈடு கொடுப்பது, மீன் உணவு.

பூமி வறண்டாலும்,
கடல் வறண்டு விடாது.

பூமியின் உணவு மூன்றில் 2 பங்கு,
கடல் உணவு மூன்றில் ஒரு பங்கு.

நிலத்திற்கு உதவி கோடி கணக்கில்,
கடலுக்கு உதவி லட்சக் கணக்கில்.

நவீனம் புகுந்தால் மீன் உணவு,
அதிகமாக இந்தியாவில் புகுந்து விடும்.

மேலை நாடுகளில் மீன் பிடித்தல் தொழிற்பேட்டை
இந்தியாவில் குடிசைத் தொழில்.

கப்பலில் மீன் பிடிப்பது மேலை நாட்டில்,
கட்டுமரத்தில் மீன் பிடிப்பது நம் நாட்டில்.

மீனை கெடாமல் பார்ப்பது, மேல் நாட்டில்
மீனை கெட்டுவிடச் செய்வது நம் நாட்டில்.

சிறிய நாடு நார்வே—அந்த நாடு மீன் பிடி
பணத்தில் இந்திய மீனவர்களுக்கு உதவி செய்கிறது.

இந்தியாவில் உள்ள மீனை மேலை நாட்டு காரன்
குத்தகைக்கு மீன் பிடிக்கிறான்—தேவையா?

என்ன லாபம் இல்லை நம் நாட்டில்—ஏன்
மீனை பிடிக்கக் கூடாதா ; நம் நாட்டிலே.

இரால் மீன் பூமியில் வளர்ப்பது—தேவையற்றது
கடலில் உள்ள இராலை பிடிக்க முயல வேண்டும்.

கடல் வளம் நிறைய உள்ளது—
கண்டு பிடித்து மீனை பிடிக்க வழி உள்ளது.

கடல் நீரை குடி நீராக்கலாம்,
குடல் ஆர குடித்து விடலாம்.

கடல் அலையை எண்ணலாம்,
மன அலையை எண்ண முடியாது.

கடற்கரை மீனவனுக்கு,
நிலக்கரை நிலம் உள்ளவனுக்கு

சிந்தனை என்பது கடலலை,
சிந்திப்பது எண்ண அலை.

சீரி வரும் புலியை நம்பலாம்,
சிறிய கடலலையை நம்ப முடியாது.

பெண்கள் கஷ்டப்பட காரணம்—
பெண்களுக்கு இளகிய மனது தான் காரணம்.

பெண்கள் கற்பை காப்பற்ற—
நாகரீகம் ஏற்றதல்ல.

கன்னியரின் நாகரீகம் தான்—
அவர்களின் எதிரி.

பெண்கள் நகைளை அணிவது
அவர்கள் உயிருக்கு ஆபத்து இந்த காலத்தில்.

பிள்ளை பெருவதும் மட்டும்தான் பெண்கள்—வேலையா,
எல்லா தகுதியும் பெண்கள் அடைய வேண்டும்.

ஆண்களும் பெண்களும் எல்லா வகையிலும் சம
உரிமை பெற்றவர்கள்.

தற்போது அதிகம் படிப்பது பெண்கள்—ஏன்
ஆண்களுக்கு ஆணவம் அதிகம்.

இந்தியாவில் தான் பெண்கள் ஆண்களுக்கு அடங்கி
நடக்கிறார்கள், மேலை நாடுகளில் சம அந்தஸ்து
முறையில்லை.

குடும்ப தலைவனை விட குடும்ப தலைவருக்கு தான்
பொருப்பும் மரியாதையும் உண்டு.

மனித சக்திக்கு அற்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு.

உலகத்தில் எந்த தலைவருக்காவது எம். ஜி. ஆர் அவர்கள்
போல் தனித் தம்மை உண்டா?

திருக்குறளைப் போல் திருமண நூல் இது நாள் வரை
குறளைத்தவிர வேறு நூல் இயற்றியது உண்டா?

காயமே பொய்யடா என ஆண்டு அனுபவித்த பிறகு,
அந்த காலத்தில் சொல்லும் விரக்தி வார்த்தை.

உழைக்கத் தெரிந்த மீனவன் பணத்தை மிச்சப்படுத்தி
சராசரி வாழ்க்கைக் கூட வாழ முடியவில்லை—ஏன்

ஆத்திரப் பட்டவன் வாழ்வது இல்லை.
அமைதி என்றும் அழிவது இல்லை.

பல்வேறு வரலாறுகள் தோன்றி மறைந்தன, ஆனால்
எம். ஜி. ஆர். வரலாறு அழியாத வரலாறு (சத்துணவு)

ஆளுகின்றவர்களுக்கு துணிவு வேண்டும், எம். ஜி. ஆர் போல்

ஆஞ்சுபவன் ஆளமுடியாது எதையும்.

நாளை நாளை என நாள் கடத்துவது—நல்லவனுக்கு
அழகல்ல எந்த காரியத்திலும்.

நாடோ வீடோ சிறப்படைய நாணயம்
நா—நயம் இரண்டும் தேவை.

பொது உடைமை சித்தாந்தம்—எங்கே எந்த
தொழிலில் உள்ளது மீனவர்களிடையே உள்ளது.

ஏமாந்தால் ஏச்சி பிழைப்பவன்
வாழத்தான் செய்வான்.

ஏமாற்றம் எப்போது வருகிறது—மற்றவன்
உன்னை ஏமாற்ற முயற்சி செய்யும் போது.

ஏமாற்றம் என்ற சொல்லே—தான் சாமர்த்திய வாதி
என்று தானே நினைப்பவன் சொல்லும் வார்த்தை.


தற்போது அரசியலில் மறைந்த சரித்திர பெயர்கள்
போஸ்டர்களில் வருகிறது.

சரித்திரம் என்பது மறைக்கப்படுகிறது.

கம்பெனியில் வேலை செய்வது போல்—ஊழியர்கள்
அரசு அலுவலகங்களில் வேலை செய்வதில்லை

இந்த காலத்தில் யாரும் உண்மைபேசுவதில்லை—ஏன்
கேட்பவன் பொய்யைச் சொல்லகட்டாயப்படுத்துகிறான்.

நீதி மன்றத்தில் தினம் தினம்
பொய்யே பேசப்படுகிறது.



# தலைவன் புகழ் பாடும் தொண்டன் !

இந் நூலாசிரியர் ஜெ. பாலன் 1940-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் நாள் செங்கை மாவட்டத்திலுள்ள பெரிய நீலங்கரை குப்பம் என்ற கிராமத்தில் ஜெயராம செட்டியாருக்கும், மீனாட்சி யம்மாளுக்கும் பிறந்தார்.

சத்துணவு கொடுத்து—ஏழை
சந்ததியை தழைக்கச் செய்த
தத்துவத் தலைவா ! எங்கள் செந்தமிழ் முதல்வா !
தவறியும் சந்திரன் மண்ணில் விழுந்ததில்லை !
நீ தவறுள்ள வாழ்க்கை என்றும் வாழ்ந்ததில்லை !
தாய்க்குலம் போற்ற தரணியை ஆள்கின்றாய்!
தர்மம் செழிக்க சத்தியம் நிலைக்க வாழ்கின்றாய்!
திசையெல்லாம் உன் புகழ் இசையே கேட்கிறது !
வசைமாறி தூற்றுவோர் குரல்கள் எங்கோ
மறைகிறது !
வெற்றிப் பூக்கள் உன் தோட்டம் முழுதும் பூத்துச்
சிரிக்கிறது !—உன்னை
சுற்றி நின்ற பகைவர் கூட்டம் கருகியே சாய்கிறது!
ஜெ. பாலன் போன்ற உத்தமத் தொண்டன்—நம்
கழக அணியில் இருக்கையில் சோதனை என்பது
உமக்கில்லை!
தலைவன் உயிரைக் காக்க அண்ணன் அரசைக் காக்க
கழகத் தோழன் உயிர் பெரிதில்ல !

**M. சசீதரன்**

ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்,
நெ. 12, கஜபதிதெரு, சென்னை-600 005.